மதிப்பிற்குரியவர்களுக்கு...
RAMRAJ
காட்டன்
வேட்டிகள் • சர்ட்டுகள் • பனியன்கள்

மலர் 7 • இதழ் 1 • ஜூலை 2022 • விலை ரூ.18/-

# வெண்மை

தமிழ் மாத இதழ்
VENMAI

எண்ணங்கள்



## ஆசை சிறப்பிதழ்


மென்மையில்
வெண்மை
உங்கள் கம்பீரத்தை இன்னும்
அழகாய் காட்டுகின்ற
ராம்ராஜ் சர்ட்டுகள்
For the Prestigious People...
RAMRAJ ©
COTTON SHIRTS
Available at Company Showrooms & All leading Textile Shops
shop online@ www.ramrajcotton.in

மதிப்பிற்குரியவர்களுக்கு...
RAMRAJ
காட்டன்
வேட்டிகள் • சர்ட்டுகள் • பனியன்கள்

## ஆசைகள் எப்படி இருக்க வேண்டும்?
## எதற்கெல்லாம் ஆசைப்பட வேண்டும்?
## எந்த ஆசைகளைத் தவிர்க்க வேண்டும்?
## எல்லாவற்றுக்கும் வழிகாட்டும்



# ஆசை
## சிறப்பிதழ்

**என்ற இந்த இனிய நூலை வழங்குவதில்
பெருமிதம் கொள்கிறோம்.**

# மதிப்பிற்குரியவர்களுக்கு...

**வணக்கம்.**

‘ஆசையில்லாத மனமும் ஓசையில்லாத கடலும் உலகில் இல்லை’ என்பது நம் முன்னோர்கள் கண்டுணர்ந்த அனுபவம். வாழ்க்கை முழுவதும் சிறியதும் பெரியதுமாக ஆசைகள் அலையடித்துக்கொண்டே இருக்கின்றன. கரையில் நின்று கால் நனைத்து மகிழ்ச்சி அடைகிறவரை அலைகளால் எந்தப் பிரச்னையும் இல்லை. நம்முடைய தகுதி அறிந்து, தேவை உணர்ந்து, உழைப்பும் முயற்சியும் கொண்டு அடையும் ஆசைகளே நம் வாழ்வை அழகாக மாற்றுகின்றன. அதேநேரம் பேரலையில் மூழ்காமல் இருப்பதும், பேராசையின் வலையில் சிக்காமல் கவனமாக இருப்பதும் அவசியம்.

சுயநலம் மிகுந்த ஆசைகள் பற்றிய நகைச்சுவையான ஒரு கதை உண்டு. ஒரு நிறுவனத்தில் பணியாற்றும் மேனேஜர், சூப்பர்வைசர், விற்பனைப் பிரதிநிதி ஆகிய மூவரும் ஒன்றாக அமர்ந்து சாப்பிட ஆரம்பித்தனர். “எத்தனை கடைகளில் ஏறி இறங்கினாலும் பெரிய அளவில் ஆர்டரே கிடைப்பதில்லை” என்று சலித்துக்கொண்டார் விற்பனைப் பிரதிநிதி. ‘‘இங்கே யாருமே ஒழுங்கா வேலை செய்யறதில்லை. ஏன் வேலை செய்யலைன்னு கேட்டா ஆயிரம் காரணங்கள் சொல்றாங்க. செய்ய முடியும்ங்கிறதுக்கு ஒரு காரணம் சொல்ல மாட்றாங்க. வேலையே வாங்க முடியவில்லை” என்று புலம்பினார் சூப்பர்வைசர். ‘‘வேலை செய்யவே தெரியாத உங்களையெல்லாம் வச்சிக்கிட்டு நான் என்ன செய்யப் போறேனோ?’’ என்று மேனேஜர் அந்த இருவரையும் வெளுத்து வாங்கினார்.

ஆதங்கத்தோடு இவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போது திடீரென ஒரு பூதம் அவர்கள் முன் தோன்றியது. “ஏன் இப்படி கஷ்டப்பட்டு வாழ்கிறீர்கள். உங்கள் ஆசையைச் சொல்லுங்கள். உடனே நான் நிறைவேற்றி வைக்கிறேன். ஆனால் ஆளுக்கு ஓர் ஆசை மட்டும்தான்” என்றது. பூதத்தைப் பார்த்ததும், “நீ எப்படி அலுவலகத்திற்குள் அனுமதி இல்லாமல் வந்தாய். செக்யூரிட்டி தூங்குறானா?” என்று கோபப்பட்டார் மேனேஜர்.

‘‘அவர் லண்டனைச் சுற்றிப் பார்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டார். அனுப்பி வைத்திருக்கிறேன்” என்று பூதம் சொன்னதும் மூவரும் அதிர்ந்து போயினர்.

சூப்பர்வைசர்தான் முதலில் அந்த அதிர்ச்சியிலிருந்து மீண்டவர். “ஆசையை நிறைவேற்றும் பூதம் சார். நாமும் கேட்டுப் பார்ப்போம்” என்று சொன்ன அவர், கையோடு தன் ஆசையை வெளிப்படுத்தினார். “இங்கே ஒரே வெயிலாக இருக்கிறது. நான் அமெரிக்காவுக்குப் போகவேண்டும். நயாகரா அருவியின் முன்னால் ஆனந்தமாக இருக்க வேண்டும்” என்று அவர் கேட்டதும், உடனடியாக அவரை நயாகரா அருவி முன்னால் நிறுத்தியது பூதம். அடுத்து விற்பனைப் பிரதிநிதி, “எனக்கு வேலைசெய்து அலுத்துவிட்டது. நான் மாலத்தீவில் ஒரு பங்களாவில் வாழ வேண்டும். அங்கு எனக்கு வேலை செய்ய பணியாளர்கள் வேண்டும்” என்று கேட்டார். அவர் கேட்டபடியே நடந்தது.

அடுத்ததாகத் தன் ஆசையைச் சொன்னவர் மேனேஜர். எல்லோரும் மாயமானதால் கடும் கோபத்தில் இருந்த அவர், “அடுத்த வாரம் எம்.டி., மீட்டிங் இருக்கு. இவங்க ரெண்டு பேரும் இப்படி ஜாலியா ஊர் சுத்தப் போயிட்டா யாரு இங்க வேலை செய்றது? என் நிம்மதி காணாமப் போயிடும். அவங்க ரெண்டு பேரும் மட்டுமில்லாம, அந்த செக்யூரிட்டியும் உடனே இங்க இருக்கணும்” என்று தன் கறாரான ஆசையை வெளிப்படுத்தினார். அதிர்ச்சியான பூதம் அப்படியே செய்துவிட்டு மாயமானது. ‘மூவரும் பழையபடி அதே அலுவலகத்தில் இருந்தனர்’ என்று கதை முடியும்.

நகைச்சுவைக்காகச் சொல்லப்படும் கதைதான். ஆனால், இதில் அனைவரும் தங்களின் சுயநலமான ஆசையை மட்டும்தான் வெளிப்படுத்தினர். குறைந்தபட்சம் தங்கள் குடும்பத்தினரைக்கூட நினைத்துப்பார்க்கவில்லை. ஆசைகளின்றி மனிதன் வாழ இயலாது என்றாலும், அந்த ஆசை என்பது குறுகிய மனப்பான்மையுடன் இருந்துவிடக்கூடாது. எல்லா உணர்வுகளிலும் நல்லதும் கெட்டதும் கலந்தே இருக்கின்றன. மனித வாழ்விலிருந்து பிரிக்க முடியாத உணர்வு ஆசை. ‘ஆசைப்பட்டத சாப்பிட முடியல... ஆசைப்பட்டத உடுத்த முடியல... ஆசைப்பட்ட வாழ்க்கை கிடைக்கல’ என ஆசை நிறைவேறாத ஏமாற்றம் பலருக்கு வாழ்க்கை முழுவதும் நிழல் போல தொடர்ந்துகொண்டே வருகிறது. ‘ஆசைகள் இல்லாமல் வாழுங்கள்’ என்ற போதனைகள் நடைமுறை வாழ்விற்குப் பொருத்தமற்றவை. முற்றும் துறந்த ஞானியராக எல்லாரும் மாறிவிடப்போவதில்லை. அது தேவையும் இல்லை. மனித வாழ்வின் இயக்கம் ஆசைகளின் மூலமாகவே தொடர்கிறது.

பல ஆயிரக்கணக்கான நெசவாளர்கள்





நன்றாகச் சாப்பிட்டு, நன்றாக உடை உடுத்தி, அடிப்படைத் தேவைகள் பூர்த்தியாகி மகிழ்ச்சியாக வாழ வேண்டும் என்கிற என் ஆசை, ராம்ராஜ் காட்டன் நிறுவனத்தைத் தொடங்க வைத்தது. என்னை அதிகம் உழைக்க வைத்தது. தொழிலைக் கண்ணும் கருத்துமாகச் செய்யத் துணைநின்றது. பல ஆயிரக்கணக்கான ராம்ராஜ் காட்டன் ஊழியர்களின் வாழ்வாதாரம் மேலும் சிறக்க வேண்டும் என்கிற ஆசை என்னைத் தொடர்ந்து இயக்குகிறது. ராம்ராஜ் காட்டன் தயாரிப்புகளை வாங்கும் வாடிக்கையாளர்கள் மனநிறைவுடன் வாழ்த்த வேண்டும் என்கிற ஆசை, தொழிலை நேர்த்தியாகவும் நேர்மையாகவும் செய்ய வைக்கிறது. சமுதாய வளர்ச்சிக்கு உதவும் ஆசையே, ஓய்வு நேரத்தைச் சமுதாய வளர்ச்சி சார்ந்த பணிகளில் பங்கேற்க வேண்டும் என்கிற ஆர்வத்தைத் தூண்டுகிறது. இப்படி நான் நேர்பாதையில் சிறப்பாகப் பயணிக்க இத்தகைய நேர்மறையான ஆசைகளே காரணம்.

மாறாக 'எப்படியாவது பெரிய பணக்காரனாக வேண்டும்' என்கிற ஆசை, சுயநலப் பாதையில் அழைத்துச் செல்லும். நீடித்த வளர்ச்சி கிடைக்காது. சிறிது காலத்திற்கு மகிழ்ச்சி கிடைக்கலாம். மனநிறைவும், நிலைத்த மகிழ்ச்சியும் நிச்சயம் கிடைத்திருக்காது. பிறர் வளர்ச்சியில் கவனம் செலுத்தும்போது என்னுடைய வளர்ச்சி நன்றாக இருக்கிறது. என் குடும்பம் மகிழ்ச்சியாக இருக்கிறது. தொழில் நன்றாக நடக்கிறது. இதுதான் வெற்றியின் ரகசியம்.

மனித வாழ்வில் ஆசை தவிர்க்க இயலாத ஒன்று. ஆசையைச் சரியான வழியில் எதிர்கொள்ளவே நம் மனதிற்குப் பயிற்சி தேவைப்படுகிறது. 'தன்னை உணரும்' ஆன்மிகத்தின் வழியே, ஆசைகளை பாசிட்டிவான உணர்வுகளாக மாற்ற இயலும். சுயநலமாக இருந்துவிடாமல், நம்மைச் சுற்றி இருப்பவர்களின் நலனையும் உள்ளடக்கி நாம் ஆசைகளை வடிவமைத்துக்கொண்டாலே போதும்.

'நான் மட்டும் நன்றாக வாழ்ந்தால் போதும்' என்று ஆசைப்படாமல், 'நம்மைச் சுற்றி இருக்கிற எல்லோரும் நன்றாக வாழ வேண்டும்' என்று நினைக்கத் தொடங்கினால் நாமும் பிறர் வாழ்வில் பங்களிக்கத் தொடங்கிவிடுவோம். வாழ்வில் தன்னலம் மறந்து பிறர் நலம் போற்றும் பக்குவம் பெற, வேதாத்திரி மகரிஷி அவர்களின் ஆன்மிகப் பயிற்சிகள் பெரிதும் வழிகாட்டுகின்றன. சரியான ஆன்மிகத் தேடல் இருந்தால், ஆசைகளுக்கு அடிமையாகாமல், சரியாகக் கையாள முடியும். ஆசைகளைப் பாசிட்டிவ் உணர்வாக மாற்றிக்கொள்ளும் வழிமுறைகளைச் சுட்டிக்காட்டுகிறது இம்மாத வெண்மை இதழ். நிச்சயம் பயனுள்ளதாக அமையும் என நம்புகிறேன்.

வாழ்க வையகம்... வாழ்க வளமுடன்!

**கே.ஆர்.நாகராஜன்**

**நிறுவனர் – ராம்ராஜ் காட்டன்**



# எப்படி ஆசைப்பட வேண்டும்?

ஒரு மடாலயம் நாடு முழுக்க நிறைய கோயில்களை நிர்வாகம் செய்துவந்தது. அதன் நிர்வாகத்தின் கீழ் ஒரு மலைக் கிராமத்தில் இருக்கும் கோயிலில் பூஜைகள் செய்துவந்தார் ஒருவர். மடாலயத் தலைவராக இருந்த துறவிக்கு அவர் ஒருநாள் கடிதம் எழுதினார். ‘எங்கள் மலைக்கோயிலில் நிறைய பராமரிப்புப் பணிகள் செய்ய வேண்டும். இப்போது பக்தர்களும் நிறைய பேர் வருகிறார்கள். எனவே, என்னுடன் இணைந்து பணியாற்ற ஒரு சீடரை இங்கு அனுப்பி வையுங்கள்’ என்று அந்தக் கடிதத்தில் இருந்தது.

துறவி அந்தக் கடிதத்தைத் தன் சீடர்களிடம் சத்தமாகப் படித்தார். பிறகு, “உங்களில் ஐந்து பேரைத் தேர்வுசெய்து அங்கு அனுப்பப் போகிறேன்” என்றார். “அவர் ஒருவரைத்தான் கேட்கிறார். நீங்கள் ஏன் ஐந்து பேரை அனுப்புகிறீர்கள்” என்று ஒரு சீடன் குழப்பத்துடன் கேட்டான். “அந்தக் கோயில் தூரமாக இருக்கிறது. பாதையும் நீளம், வழியில் ஆசையால் திசைமாறுவதற்கு ஏராளமான வாய்ப்புகள் இருக்கின்றன. ஐந்து பேரை அனுப்பினாலும் ஒருவராவது அங்கு போய்ச் சேர்வது சந்தேகம்” என்றார் துறவி. சீடர்கள் இது முட்டாள்தனம் என்று நினைத்துச் சிரித்தனர்.

அடுத்த நாள் ஐந்து சீடர்கள் பயணத்தைத் தொடங்கினர். இரண்டு நாட்கள் சென்றபிறகு ஒரு கிராமத்தை அடைந்தனர். அவர்களைப் பார்த்த ஊர்த் தலைவர், “எங்கள் ஊர் கோயிலில் பூஜைகள் செய்பவர் நேற்று இறந்துவிட்டார். உங்களில் யாராவது அந்தப் பணியைச் செய்ய முடியுமா? தங்குவதற்கு வீடும் நல்ல சம்பளமும் தருகிறோம்” என்றார். செழிப்பான அந்த ஊரைப் பார்த்ததும் ஒரு சீடனுக்கு ஆசை வந்தது. “இதுவும் கோயில் பணிதானே? நான் இதைச் செய்கிறேன்” என்று அங்கேயே தங்கிவிட்டான். மற்ற நால்வரும் தொடர்ந்து நடந்தனர்.

சில நாட்களில் அடுத்த நாடு வந்தது. வேட்டைக்கு வந்திருந்த அந்த நாட்டு மன்னன் இந்த நால்வரையும் பார்த்தான். அவர்களில் அழகாகவும் வலிமையாகவும் இருந்த ஒரு சீடனை நெருங்கினான். “என் மகளுக்கு நீண்ட காலமாக வரன் தேடிக்கொண்டிருக்கிறேன். நீ அவளுக்குப் பொருத்தமானவனாக இருப்பாய். எனக்கு ஒரே மகள்தான். அவளை மணந்தால், எதிர்காலத்தில் இந்த நாட்டுக்கே மன்னன் ஆகலாம்” என்றான். இதைவிட அதிர்ஷ்டம் யாருக்காவது கிடைக்குமா? அவன் ஆசையாக சம்மதித்து மன்னனுடன் கிளம்பிப் போனான்.

மற்ற மூவரும் பயணத்தைத் தொடர்ந்தனர். ஒரு கிராமத்தைத் தாண்டும்போது அவர்களுக்குக் கடுமையான பசி. சோர்வாக இவர்கள் நடப்பதைப் பார்த்ததும், அந்த ஊர் வணிகர் ஒருவர் இவர்களின் பயணம் குறித்து விசாரித்து, விருந்து கொடுத்து உபசரித்தார். பெரிய மாளிகை போன்ற வீட்டில் அந்த வணிகரும் மனைவியும் மட்டுமே இருந்தனர். இருவருமே சோகமாக இருப்பதைப் பார்த்து சீடர்கள் விசாரித்தனர். “நாடு



முழுக்க வியாபாரம் செய்து ஏராளமான சொத்து சேர்த்து வைத்திருக்கிறேன். இந்த வியாபாரத்தைக் கவனிக்கவும், எங்கள் மீது அன்பு செலுத்தி உரிய கடமைகளைச் செய்யவும் ஒரு மகன் இல்லை. உங்கள் குரு எப்படியும் உங்களுக்கு நல்ல பழக்கங்களையும் கல்வியையும் தந்திருப்பார். உங்களில் ஒருவர் என் வளர்ப்பு மகனாக இருக்கச் சம்மதித்தால் தத்தெடுத்துக்கொள்கிறேன்'' என்றார் வியாபாரி. சீடர்களில் ஒருவன் உடனே எழுந்து சென்று, ''நான் சம்மதிக்கிறேன்'' என்று அவர்கள் காலில் விழுந்து வணங்கினான். அவனை ஆரத் தழுவிக்கொண்டார் வணிகர்.

அவனைப் பிரிந்து மற்ற இருவரும் அமைதியாகக் கிளம்பினார்கள். வழியில் அடர்த்தியான காட்டைத் தாண்டிச் செல்ல வேண்டும். அந்த நேரத்தில் மழையும் பெய்ய ஆரம்பித்தது. பாதை சரியாகத் தெரியாததால், தட்டுத் தடுமாறி நடந்தார்கள். சூரிய அஸ்தமன நேரத்தில்தான் அவர்கள் காட்டைவிட்டு வெளியில் வர முடிந்தது. வழி மாறிவிட்டோமோ என்ற குழப்பம் ஏற்பட்டது. நன்கு இருட்டுவதற்குள் பாதுகாப்பான இடத்துக்குப் போக நினைத்தார்கள். வெகுதூரத்தில் ஒரு சிறு புள்ளியாக வெளிச்சம் தெரிந்தது. அங்கு யாரோ இருக்க வேண்டும் என்று நினைத்து வேகமாக நடந்தார்கள்.

சில வீடுகள் மட்டுமே இருந்த சிறிய கிராமம் அது. அங்கு பெரிய மாளிகை ஒன்றில் எரிந்த வெளிச்சம்தான் அவர்கள் பார்த்தது. அந்த வீட்டில் தங்குவதற்கு அனுமதி கேட்கலாம் என்று கதவைத் தட்டினார்கள். அழகிய இளம்பெண் ஒருவள் கதவைத் திறந்தாள். ''ஊரில் எல்லோரும் ஒரு திருமணத்துக்குப் போயிருக்கிறார்கள். என் பெற்றோரும் அவர்களுடன் போயுள்ளனர். திரும்பி வர இரண்டு நாட்களாகும். தனியாக எப்படி இருப்பது என்று கடவுளிடம் வேண்டினேன். உங்களை அனுப்பி வைத்திருக்கிறார்'' என்று அவர்களுக்கு உணவு பரிமாறினாள். வீட்டுக்கு வெளியில் திண்ணையில் அவர்கள் தூங்குவதற்கு வசதி செய்து கொடுத்தாள். பேசும்போதே ஒரு சீடன் அவளிடம் காதல் கொண்டான். அவளும் அவனிடம் ஆசையாகப் பேசினாள். விழுந்து விழுந்து கவனித்தாள்.

மறுநாள் காலையில் அந்தச் சீடன் பயணத்தைத் தொடர மறுத்தான். "இந்தப் பெண்ணைப் பாதுகாப்பற்ற சூழலில் விட்டுவிட்டு வரமாட்டேன். நீ மட்டும் போ'' என்றான் இன்னொருவனிடம். கடைசியில் அவன் மட்டுமே மலைக்கோயிலுக்குப் போய்ச் சேர்ந்தான். ஆசைகள் சலனப்படுத்தித் திசைமாற்றும் என்று துறவி கணித்தது பலித்தது.

'வாழ்க்கையில் எதையேனும் அடைவதற்கு ஆசைப்படுங்கள், அப்போதுதான் அந்த இலக்கைச் சாதிக்க முடியும்' என்று சமூகம் நமக்குச் சொல்லிச் சொல்லி வளர்க்கிறது. விலங்குகளுக்கு ஆசைகள் கிடையாது. தினம் தினம் வழக்கம் போல ஒரு வாழ்க்கையை வாழ்ந்து, கிடைத்ததைத் தின்று நாட்களை நகர்த்துகின்றன. மனிதர்கள் அப்படி இல்லாமல் தங்கள் வாழ்க்கையை எளிதாகவும் இனிமையாகவும் மாற்றுவதற்கு ஏராளமான கருவிகளையும் பொழுதுபோக்குகளையும் கண்டுபிடித்தார்கள். நம் நாகரிகமும் அறிவியலும் வளர்ந்ததே நமது ஆசைகளால்தான். அந்த ஆசைகள் நெறிப்படுத்தப்பட்டவையாக இருக்க வேண்டும்.

'எதிர்காலத்தில் எனக்கு இப்படி நடக்க வேண்டும்' என்று ஏதோ ஒரு விஷயத்தை எதிர்பார்ப்பதே நம் ஆசையாக இருக்கிறது. அது நடந்தால்தான் மகிழ்ச்சி கிடைக்கும் என்று நினைக்கிறோம். அந்த எதிர்பார்ப்பில், நிகழ்கால மகிழ்ச்சியைத் தொலைத்துவிடுகிறார்கள் பலர். ஆசைகளே நமக்கு வளமான எதிர்காலத்தை உருவாக்கித் தருகின்றன. நம் கனவுகளை நிஜமாக்கும் உந்துதலைக் கொடுக்கின்றன. என்றாலும், அந்த எதிர்பார்ப்புகளால் நிகழ்கால மகிழ்ச்சியைத் தொலைத்துவிடக் கூடாது.

இந்த நிமிடத்தை அனுபவித்து வாழ்வதே வாழ்க்கை. நம்மைச் சுற்றியிருக்கும் மரங்களின் பசுமை, பூக்களின் நறுமணம், பறவைகளின் இனிய ஓசை, நீலவானத்தின் அழகு, குழந்தைகளின் சிரிப்பு என்று எல்லாவற்றையும் ரசித்து வாழ்வோம். நிரந்தர மகிழ்ச்சி வேண்டும் என்று ஆசைப்படுவோம். ●





## ஆசைகளைத் தவிர்க்க வேண்டுமா?

**ம**கிழ்ச்சியாக இருக்கும் நேரத்தில், அந்த மகிழ்ச்சி நீடிக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறோம். அந்த மகிழ்ச்சி மறைந்து, துன்பத்தின் வலியும் பிரச்னையின் வேதனையும் நம்மைத் தாக்குமோ என்று பயப்படுகிறோம். இந்தப் பயத்திலிருந்தே நம் ஆசை பிறக்கிறது. மனிதர்கள் மொழியைக் கண்டுபிடித்துப் பேச ஆரம்பிப்பதற்கு முன்பாகவே அவர்களுக்கு உணர்வுகள் வந்துவிட்டன. அந்த உணர்வுகளிலிருந்தே ஆசைகள் உருவாகின்றன. உணர்வுகளைச் சிறப்பாகக் கையாண்டால், நாம் ஆசைகளை நெறிப்படுத்த முடியும்.

உதாரணமாக, ஒரு வீட்டைப் பார்க்கிறோம். அது ரொம்பவே அழகாக இருக்கிறது. அது நமக்குச் சொந்தமாக இருந்தால் நன்றாக இருக்குமே என்ற ஆசை எழுகிறது. அந்த ஆசையை நாம் அலசிப் பார்க்க வேண்டும். அந்த வீட்டை அவர்கள் விற்கத் தயாராக இருக்கிறார்களா, நாம் அதை வாங்கும் பொருளாதார நிலையில் இருக்கிறோமா, அது நியாயமான விலைதானா, அந்த வீடு நம் குடும்பத்துக்குப் பொருத்தமான அளவில் உள்ளதா, குழந்தைகளின் பள்ளி மற்றும் கல்லூரிப் பயணத்துக்கும், நம் அலுவலகப் பயணத்துக்கும் ஏற்றதாக வீடு இருக்குமா... இப்படி எல்லாவற்றையும் பரிசீலித்து அடுத்தக்கட்டத்துக்குச் செல்ல வேண்டும். சரிப்படாது என்றால் ஒதுங்கிவிட வேண்டும். இதைச் சரியாகச் செய்தால் ஏக்கமோ, விரக்தியோ எழாது. நிறைவேறாத ஆசைகள் நீளாது.

ஆசைகளை ஒட்டுமொத்தமாகத் தவிர்க்க வேண்டியதில்லை. ஆனால், தேவையற்ற ஆசைகளை ஒதுக்கிவைக்க வேண்டும். அதுவே நிம்மதியான, மகிழ்ச்சியான வாழ்வை நமக்குக் கொடுக்கும்.

---

## பொக்கிஷத்தைத் திறந்து பாருங்கள்!

**ஒ**ரு ஜென் துறவியிடம் வந்தான் இளைஞன் ஒருவன். “எனக்கு நல்ல வேலை, அழகான மனைவி, இனிமையான குடும்பம் என்று எல்லாம் கிடைக்க வேண்டும் என ஆசைப்படுகிறேன். அதற்கு வழிகாட்டுங்கள்” என்று வேண்டினான். “இதையெல்லாம் அடைவதற்கு நீ என்ன செய்தாய்?” என்று கேட்டார் துறவி. “எல்லாவற்றையும் தேடிக் கொண்டிருக்கிறேன்” என்று பதில் தந்தான் இளைஞன். “உனக்குள் தேடினாயா?” என்று கேட்டார் துறவி. அவன் விழித்தான்.



“உன் மனம் என்பது ஒரு பொக்கிஷம். அதைத் திறந்து பார். நினைத்த எல்லாவற்றையும் அடைவதற்கான ஆசை அதற்குள் ஒரு தீபம் போல எரிந்து கொண்டிருக்கிறது. அது தரும் வெளிச்சத்தில், நேர்மையான பாதையில் பயணம் செய்து எந்த இலக்கையும் அடையலாம்” என்றார் துறவி.

மனம் என்ற பொக்கிஷத்தைத் திறந்து பாருங்கள். நீங்கள் ஆசைப்படும் எதையும் அடையும் வழி கிடைக்கும்.

---



## ஆசைகள் வளரும்!

**ஆ**சைகள் என்பவை உங்களின் நிழல் போன்றவை. மாலை நேரத்தில் நீண்டு வளர்ந்திருக்கும் உங்கள் நிழலின் தலையைத் தொட வேண்டும் என்று நீங்கள் எவ்வளவு வேகமாக ஓடினாலும், உங்கள் நிழலின் தலையும் அதே வேகத்தில் முன்னால் ஓடும். வண்டியை இழுக்கும் குதிரை வேகமாக ஓட வேண்டும் என்பதற்காக, ஒரு குச்சியில் கேரட்டைக் கட்டி அதன் முன்னால் நீட்டுவார் வண்டிக்காரர். கேரட்டைச் சாப்பிடும் ஆசையில் குதிரை வேகமாக ஓடும். அது ஓடும் வேகத்தில் கேரட்டும் முன்னால் போகும் என்பது அதற்குத் தெரியாது. ஆசைகள் இப்படித்தான் நம்மை இழுத்துச் செல்லும்.

ஆசைகளில் ஒன்று நிறைவேறியதும், இன்னும் பல ஆசைகள் அங்கேயே முளைக்கும். ஓட்டைப் பாத்திரத்தில் நீர் பிடித்தால், பாத்திரம் ஒருபோதும் நிரம்புவதில்லை. நம் ஆசைகளும் எந்த நாளிலும் தீர்ந்து போவதில்லை. ஆசைகள் நம்மை வெற்றியை நோக்கியும் அழைத்துச் செல்லும், மோசமான இருட்டிலும் தள்ளிவிடும். எப்படிப்பட்ட ஆசைகளை நாம் மனதில் சுமக்கிறோம் என்பதைப் பொறுத்தது அது.



## நேர்மறை ஆசைகள்!

**ந**ம் கட்டுப்பாட்டில் ஆசைகள் இருக்கின்றனவா, அல்லது ஆசைகளின் கட்டுக்குள் நாம் சிக்கியிருக்கிறோமா என்பதைப் பொறுத்தே நம் எதிர்காலம் அமைகிறது. ஆசையே ஓர் இலக்கை நோக்கி நம்மை அழைத்துச் செல்லும் வழிகாட்டி. தவறான வழிகாட்டியின் துணையுடன் பயணம் செய்தால், நாம் பாதை மாறிவிடுவோம். நேர்மறைச் சிந்தனையுடன் நமக்கு வளர்ச்சியையும் தரும் ஆசைகளே நம்மை மெருகேற்றும். எதிர்மறைச் சிந்தனையை விதைத்து, அழிவுகளை ஏற்படுத்த நினைக்கும் ஆசைகள் ஒருவரின் வாழ்வையே சிதைத்துவிடும்.



## வெறும் ஆசை போதுமா?

**வா**ழ்க்கையில் முன்னேறுவதற்கும், நினைக்கும் இலக்கை அடைவதற்கும் வெறும் ஆசை மட்டுமே போதுமானதா? ஓர் உதாரணத்தை வைத்து இதைப் பார்ப்போம். அலுவலகம் ஒன்றில் அடிமட்ட நிலையில் வேலை செய்கிறார் ஒருவர். அடுத்தடுத்த ஆண்டுகளில் வரிசையாகப் பதவி உயர்வுகள் பெற்று, சீக்கிரமே அந்த நிறுவனத்தின் மேனேஜர் ஆக வேண்டும் என்று அவர் ஆசைப்படுகிறார். மேனேஜர் அறையில் இருக்கும் சொகுசான நாற்காலியில், தான் அமர்ந்து எல்லோருக்கும் உத்தரவுகள் போடுவது போலக் கனவு காண்கிறார்.

இப்படி எதிர்காலம் குறித்துக் கனவு காண்பது மட்டுமே அவரை உயர்த்திவிடுமா? நிச்சயம் நடக்காது. எதிர்காலம் குறித்த கனவுகளைப் போலவே, நிகழ்காலத்தில் என்ன செய்கிறோம் என்பதும் முக்கியம். எதிர்காலத்தில் அவர் மேனேஜராக வேண்டும் என்றால், நிகழ்காலத்தில் அவர் தன் வேலையைச் சிறப்பாகச் செய்ய வேண்டும். சரியான நேரத்தில் வேலைக்கு வருவது, ஒழுங்காக வேலை பார்ப்பது, தன் வேலையில் ஈடுபாடு காட்டுவது, நிறுவனத்துக்கு விசுவாசமாக இருப்பது, உயர்பதவிகளுக்கு தான் தகுதியானவன் என்பதைத் தனது திறமைகள் மூலம் நிரூபிப்பது என்று அவர் இருந்தால், அவரின் முன்னேற்றத்துக்கு எந்தத் தடையும் இருக்காது. வெறும் எதிர்காலக் கனவும் ஆசையும் மட்டுமே வெற்றி தராது. ●

ஆசை ஒருவரின் மனத்தில் உருவெடுக்கிறது. அது தவறானதாக இருக்கும்போது மூளை எச்சரிக்கை செய்கிறது. சரியானதாக இருக்கும்போது மூளை அதற்கு வழிகாட்டுகிறது. மனத்துக்கும் மூளைக்கும் முரண்பாடு ஏற்படாதவாறு ஆசைகளை வகுத்துக்கொண்டால், வாழ்க்கை நன்றாக இருக்கும்.

மனத்தின் தரத்தைப் பொறுத்தே ஆசைகளின் தரமும் இருக்கும். பலவீனமாக இருக்கும் மனங்கள், மோசமான விஷயங்களுக்கே ஆசைப்படுகின்றன. வலிமையான மனமே, மகத்தான சாதனைகளுக்கு ஆசைப்படுகிறது.

ஒருவர் மிகப்பெரிய விஷயங்களுக்கு ஆசைப்படும்போது அவரின் எதிர்பார்ப்பு பெரிதாக இருக்கும். உழைப்பும் பெரிதாக இருக்கும். அப்படிப்பட்ட உழைப்பே அவரை மிகச்சிறந்த சாதனைகளைச் செய்ய வைக்கும். அது பலருக்கு நன்மை தரும்.

சராசரி மனிதர்கள் சராசரியான விஷயங்களுக்கே ஆசைப்படுகிறார்கள். வெற்றிகரமான மனிதர்களே மிகச் சிறந்த சாதனைகளுக்கு ஆசைப்படுகிறார்கள்.

நம் மனம் எந்த அளவுக்கு ஆசைப்படுகிறதோ, அந்த அளவுக்கான விஷயங்களை மட்டுமே நாம் செய்ய முடியும். மனத்தின் ஆசைகளுக்கு எல்லைகள் கிடையாது. எனவே, எல்லை கடந்த நல்ல ஆசைகளை மனதில் ஏற்படுத்திக்கொள்ளுங்கள்.

சலனமில்லாத மனத்தில் பெரிய ஆசைகள் எழும்போது, அதைச் சாதிப்பதற்கான வழியும் உழைப்பும் அங்கே உருவாகும். குழப்பமான மனிதர்கள் பெரிய விஷயங்களுக்கு ஆசைப்படுவார்கள். ஆனால், அதை அடையும் வழி அவர்களுக்குத் தெரியாது. வெறும் நிராசையாகவே அது இருந்துவிடும்.


சிறந்த ஆசைகளே நம்மைச் சரியான முடிவுகளை எடுக்க வைக்கின்றன. அந்த முடிவுகளே நம் செயல்களுக்குக் காரணமாகின்றன. அந்தச் செயல்களே நம்மைச் சாதனையாளர்களாக மாற்றுகின்றன.

மனித மனமே ஆசைகள் உருவாகும் கருவறை. நல்ல ஆசைகளும் தவறான ஆசைகளும் அங்கே தினம் தினம் பிறக்கின்றன. எப்படிப்பட்ட ஆசைகள் அதிகம் பிறக்கின்றன என்பதைப் பொறுத்தே ஒருவரின் குணம் வடிவெடுக்கிறது.

மனத்துக்குள் நாம் பாசிட்டிவ் சிந்தனைகளை ஏற்படுத்திக்கொண்டால், நல்ல தகவல்களையே மனத்துக்கு அனுப்பினால், அந்த மனம் நேர்மையான ஆசைகளை மட்டுமே உருவாக்கும். அப்படி இல்லாத மனம் எதிர்மறையாகச் செயல்பட்டு, தவறான ஆசைகளை நோக்கி ஒருவரைத் தள்ளும்.

வலிமையான, நேர்மையான, பெரிய ஆசைகளைக் காணும் மனிதர்கள், அந்த ஆசையால் தூண்டப்படுவார்கள். அந்த ஆசைகள் அவர்களின் செயல்பாட்டை மாற்றும், அவர்களின் குணத்தைச் செதுக்கும், வாழ்க்கை இலக்கை உருவாக்கிக் கொடுக்கும், அவர்களின் தலையெழுத்தும் அதனால் மாறும். ●

# ஆசைக்கு அணை போடுங்கள்!





# நிலையான வாழ்வுக்கு ஆசைப்படுங்கள்!

ஒரு மலைப்பாதை போன்றது பலரின் வாழ்க்கை. திடீரென உயரே போகும், திடீரென சரிவு வரும், ஓர் இடத்தில் வெயில் அடிக்கும், இன்னோர் இடத்தில் மழை பெய்யும். எதுவும் நிச்சயமில்லை. ஒரு திருப்பத்துக்குப் பிறகு என்ன வரும் என்பதே தெரியாது. விரும்பியோ, விரும்பாமலோ பலர் இப்படிப்பட்ட வாழ்க்கைப்பாதையில்தான் பயணம் செய்கிறார்கள். அதனால்தான் நிலையான வாழ்க்கையே பலரின் ஆசையாக இருக்கிறது.

வேலை காரணமாக ஏதோ ஓர் ஊருக்குப் போக வேண்டிய சூழலில் இருக்கும் ஒருவர், எங்காவது ஓரிடத்தில் தங்கி நிலையாக வேலைபார்க்கும் வாழ்க்கைக்கு ஆசைப்படுகிறார். தினம் தினம் வருமானம் எவ்வளவு வரும் என்பது நிச்சயமில்லாத வியாபாரி ஒருவர், நிலையான வருவாய் கிடைக்கும் வேலைக்காக ஆசைப்படுகிறார். சொந்தமாக ஒரு வீடு, பொருத்தமான வாழ்க்கைத்துணை, குழந்தைகளுக்கு நல்ல வேலைவாய்ப்பு தரும் படிப்பு என்று மனிதர்களின் ஆசைகளும் கனவுகளும் நிலையான வாழ்வை நோக்கியதாகவே இருக்கின்றன. 'வலி இருக்கக்கூடாது, மகிழ்ச்சி மட்டுமே இருக்க வேண்டும்' என்பதுதான் பெரும்பான்மையான மனிதர்களின் ஆசையாக இருக்கிறது.

வாழ்க்கையில் 40 வயதுக்கு மேல் புதிய துறையில் ரிஸ்க் எடுக்கும் சிலர் கூட, தங்கள் குடும்பத்துக்கு நிலையான வருமானத்தை ஏற்பாடு செய்துவிட்டே அந்த ரிஸ்க்கை எடுக்கிறார்கள். நிலையான வாழ்வு சிலருக்குக் கிடைத்துவிடுகிறது. பலருக்கு அது நிறைவேறாத ஆசையாகவே இருந்துவிடுகிறது.

மனிதர்களைப் போலவே எல்லா உயிரினங்களுக்கும் நிலையான வாழ்க்கை குறித்த ஆசை இருக்கிறது. ஆனால், அவற்றுக்கு அது கிடைப்பதில்லை. குளிர்காலத்தில் தங்கள் நாட்டின் குளிர்ச்சூழலைத் தாங்க முடியாமல் பல பறவைகள் இந்தியாவுக்கு இடம்பெயர்ந்து வருகின்றன. அவற்றுக்கு வாழும் ஆசை இருக்கிறது. நிலையான வாழ்விடம் கிடைப்பதில்லை. கோடையில் காட்டில் உணவு கிடைக்காதபோது பல விலங்குகள் இடம் பெயர்கின்றன. வேட்டை விலங்குகளிடமிருந்து தப்பிக்க சிறிய விலங்குகள் எப்போதும் உயிர்பயத்துடன் இடம் மாறுகின்றன.

போட்டிகள் நிறைந்த சூழல், பாதுகாப்பு இல்லாத வேலை, வாய்ப்புகளைத் தட்டிப் பறிக்கும் மனிதர்கள், நெருங்கியவர்களே ஏமாற்றும் நிலை என்று எல்லாவற்றையும் தாண்டி நிலையான ஒரு வாழ்வை அமைத்துக்கொள்வது பலருக்கு சவாலாகவே இருக்கிறது. இதையெல்லாம் தாண்டி, நிலைத்திருக்கும் உறவுகளையும் நிலையான வருமானம் வரும் சூழலையும் ஏற்படுத்திக்கொண்டவர்கள் பாக்கியசாலிகள்.

நிலையான வாழ்வு கிடைத்த பிறகு பலர் ரிஸ்க் எடுக்க ஆசைப்படுவதில்லை. அவர்கள் வாழ்வு அதன்பிறகு மாறுவதில்லை. நிறைய பேர் இதனால் தங்கள் திறமைக்கும் தகுதிக்கும் பொருத்தமில்லாத, சாதாரண பணிகளைச் செய்கிறார்கள். 'என்னால் இதைத் தாண்டியும் சாதிக்க முடியும்' என்று நினைப்பவர்கள் துணிந்து ரிஸ்க் எடுக்கலாம்.

என் வீடு இப்படி இருக்க வேண்டும். இவர்களெல்லாம் என் நண்பர்களாக இருப்பார்கள், என் சூழல் இப்படி மாற வேண்டும், இப்படிப்பட்ட வேலையை நான் செய்ய வேண்டும் என்று தங்களைச் சுற்றியிருக்கும் சிறிய உலகத்தை இவர்களைப் போன்றவர்களே மாற்றி அமைக்கிறார்கள். நிலையான வாழ்வு வேண்டும்தான். ஆனால், தகுதிக்கும் திறமைக்கும் குறைவான ஒரு வாழ்க்கையை வாழ்வது, நம்மை நாமே ஏமாற்றிக்கொள்ளும் செயல்.

‘ஆசைகளே துன்பத்துக்குக் காரணம்’ என்ற புத்தரின் பொன்மொழியைச் சொல்லி, ‘எதற்கும் ஆசைப்பட வேண்டாம்’ என்று ஞானிகள் சொல்வார்கள். ஆனால், ‘ஆசைகள் இல்லாமல் வாழ வேண்டும்’ என்று நினைப்பதுகூட ஒருவித ஆசைதானே! அதனால், ‘அத்தனைக்கும் ஆசைப்படு’ என்று சொல்பவர்களும் இருக்கிறார்கள்.

காட்டில் ஒரு குரங்கு வசித்து வந்தது. ஒருமுறை அது நோயாளியான போது, அதன் உடல் முழுக்கப் பேன்கள் வந்துவிட்டன. தலையில் மட்டுமின்றி, உடல் முழுக்க இருக்கும் ரோமக்காட்டில் நூற்றுக்கணக்கான பேன்கள் குடியேறிக் கடித்தன. இதனால் அந்தக் குரங்கு உடல் மெலிந்து, நோஞ்சான் மாதிரி ஆகிவிட்டது.

ஒருநாள் காட்டுக்குள் இருந்த குளத்தில் தண்ணீர் குடிக்கப் போனது குரங்கு. வழக்கமாக அது குளக்கரை மரத்தின் கிளையில் உட்கார்ந்தபடி அப்படியே குனிந்து தண்ணீர் குடித்துவிடும். இம்முறை மழை பெய்து அந்த மரமே மூழ்கும் அளவுக்குக் குளம் நிரம்பி இருந்ததால், அப்படிக் குடிக்க முடியவில்லை. குளத்தில் இறங்கி அது தண்ணீர் குடித்தது.

குளத்தில் அதன் கால்கள் மூழ்கியபோது, கால்களில் இருந்த பேன்கள் அப்படியே உடலில் ஏறியதைக் குரங்கு கவனித்தது. இன்னும் அது குளத்தில் ஆழமான பகுதியை நோக்கிப் போனபோது, பேன்கள் தண்ணீரில் மூழ்காமல் இருப்பதற்காக மேலே ஏறி வந்தன. குரங்கு இப்போது ஒரு தந்திரம் செய்தது. சிறிய மரக்கிளை ஒன்றைக் கையில் உயர்த்திப் பிடித்துக்கொண்டு குளத்தில் இன்னும் முன்னேறிச் சென்றது. கிட்டத்தட்ட குரங்கு மூழ்கும் அளவுக்குச் சென்றபோது, அதன் உடலில் இருந்த எல்லாப் பேன்களும் அந்த மரக்கிளையில் ஏறியிருந்தன. சாமர்த்தியமாக அந்தக் கிளையைக் குளத்தில் போட்டுவிட்டுக் கரைக்கு வந்தது குரங்கு. இப்போது அதன் உடலில் பேன்களே இல்லை.

குரங்கு தன்னைப் பிடித்திருந்த பேன்களிலிருந்து விடுபட்டது போல, நம்மால் ஆசைகளிலிருந்து விடுபட முடியுமா? எந்தவித ஆசைகளும் இல்லாமல் வாழ முடியுமா? ‘ஆசைகளே துன்பங்களுக்குக் காரணம்’ என்று அவற்றைத் தவிர்த்தால், ஆசைகளே இல்லாத வாழ்வு அர்த்தமுள்ளதாக ஆகிவிடுமா? அந்த வாழ்க்கையில் என்ன சுவாரசியம் நமக்குக் கிடைக்கும்?

# ஆசைகள் இல்லாமல் வாழ வேண்டுமா?





ஆசைகளில் எந்தத் தவறும் இல்லை. நம் வாழ்வில் அவற்றுக்கு நிச்சயம் இடம் தர வேண்டும். தேவைகளின் அடிப்படையில் எழும் ஆசைக்கும், ஆடம்பரங்களைத் தேடி உருவாகும் ஆசைகளுக்கும் வித்தியாசத்தை உணர வேண்டும். உணவு, உடை, வீடு, குடும்பத்தின் பொருளாதார அவசியங்கள், அடிப்படை வசதிகள் ஆகியவற்றை அடைவதற்காக ஆசைப்படுவது தவறில்லை. அந்த ஆசைகள் நிறைவேறும்போது மகிழ்ச்சி கிடைக்கும். தன் தகுதிக்கும் வசதிக்கும் மீறிய ஆடம்பரங்களுக்காக ஒருவர் ஆசைப்படும்போது, அவருக்கு மகிழ்ச்சியோ, நிம்மதியோ கிடைக்காது. அந்த ஆசைகள் நிறைவேறாதபோது விரக்தி அடைகிறார். வாழ்வில் நிம்மதி பறிபோகிறது.

ஆசைகளுக்கு முடிவு கிடையாது. ஒன்று நிறைவேறினால், இன்னொரு புது ஆசை மனதில் உருவெடுக்கும். அது நம்மை அமைதியிழக்கச் செய்யும். எந்தச் சூழலிலும் நிரந்தர மகிழ்ச்சி மற்றும் நிம்மதியை அவை தருவதில்லை. நிறைவு என்ற புள்ளியைச் சில ஆசைகள் அடைவதே மன அமைதிக்கு உத்தரவாதம் செய்யும்.

உதாரணமாக, ஒரு டி.வி., வாங்குகிறீர்கள். 'நம் வீட்டில் எல்லோரும் பொழுதுபோக்குவதற்கு ஒரு நல்ல டி.வி., வாங்க வேண்டும்' என்று ஆசைப்படுவது சரி. நம் வருமானத்தைப் பொறுத்து, வீட்டின் அளவைப் பொறுத்து திட்டமிட்டு அதை வாங்கிவிடலாம். அதை வாங்கியதும் நமக்கு நிறைவு கிடைத்துவிடும். ஆனால், 'பக்கத்து வீட்டில் இருப்பதைவிட பெரிய டி.வி., வாங்க வேண்டும்' என்றோ, 'நம் சொந்தக்காரர் வீட்டில் இருப்பது போன்ற டி.வி., வாங்க வேண்டும்' என்றோ ஆசைப்படுவது சரியல்ல! அப்படி வாங்கும் டி.வி., தற்காலிக மகிழ்ச்சி தரும், அவர்கள் வீட்டில் இருக்கும் டி.வி., மாறியதும், அந்த மகிழ்ச்சி பறிபோய்விடும்.

பல பொருட்கள் இப்படித்தான் தற்காலிக மகிழ்ச்சியை நமக்குத் தருகின்றன. 'நாம் நினைத்ததை அடைந்துவிட்டோம்' என்ற பெருமித உணர்வு நமக்கு ஏற்படுகிறது. அந்த ஆரம்பக்கட்ட மகிழ்ச்சி, சில நாட்களிலேயே காணாமல் போய்விடுகிறது. நாம் அதன்மீதான சுவாரசியத்தை இழந்துவிடுகிறோம். வேறு ஏதோ ஒரு பொருளின் மீது ஆசை வைக்கிறோம். இப்படி ஒரு சங்கிலித் தொடர் போல ஆசைகள் அடுத்தடுத்து மாறிக்கொண்டே இருக்கின்றன.

வீடு, கார், வருமானம், வசதியான வாழ்க்கை என எல்லா ஆசைகளும் நிறைவேறினால் நிரந்தர மகிழ்ச்சி கிடைத்துவிடும் என்று நினைப்பவர்கள் ஒரு விஷயத்தைப் புரிந்துகொள்ள வேண்டும். ஒருவரின் மகிழ்ச்சிக்கு இந்தப் பொருட்கள் மட்டுமே காரணம் என்றால், ஏழெட்டு வீடுகள், வரிசையாக வெளிநாட்டு கார்கள், கோடிகளில் வருமானம் தரும் தொழில்கள் என்று வாழும் கோடீஸ்வரர்கள் அத்தனை பேரும் மகிழ்ச்சியாக அல்லவா இருக்க வேண்டும்? அப்படி இல்லை என்பதுதான் உண்மை. வறுமையோ, பற்றாக்குறையோ அந்தக் கோடீஸ்வரர்களின் வாழ்க்கையில் இல்லாமல் இருக்கலாம். ஆனால், அவர்களின் ஆசைகள் இன்னும் பெரிதானவையாக இருக்கலாம்.

ஆசைகள் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு உதாரணமாக ஒரு கதையைச் சொல்லலாம். எப்படியாவது பணக்காரனாக ஆசைப்பட்டான் இளைஞன் ஒருவன். 'கடவுளை நினைத்துக் கடுமையாகத் தவம் இருந்தால், அவர் நேரில் வந்து வரம் தருவார்' என்று ஒரு ஆன்மிகச் சொற்பொழிவில் சொன்னதை அவன் கேட்டான். காட்டுக்குள் போய் தவம் இருக்க ஆரம்பித்தான். கடவுள் காட்சி தந்ததும், மூட்டை மூட்டையாய் தங்க நகைகள், பெட்டி பெட்டியாய்ப் பணம், நிறைய நிலங்கள், வீடுகள் என்று எல்லாவற்றையும் சாமர்த்தியமாக ஒரே வரத்தில் கேட்டுவிட வேண்டும் என்று உறுதி செய்துகொண்டான். ஆனால், பல ஆண்டுகள் தவம் இருந்தும் கடவுள் காட்சி தரவில்லை.

இதற்கிடையே அவனுக்கு வயதும் ஆகிவிட்டது. துறவி போல மாறியிருந்தார். காட்டில் அவரைப் பார்த்துவிட்டு நிறைய சீடர்கள் சேர்ந்தார்கள். ஆசிரமம் கட்டினார்கள். பக்கத்து கிராம மக்கள் வந்து, அவர்களுக்குத் தேவையானதைச் செய்து கொடுத்தார்கள். தனிமையில் தான் அடைந்த ஆன்மிக உணர்வுகளை வைத்து, சீடர்களுக்குப் பாடம் எடுத்துவந்தார் அவர். இதனால் அவரின் ஆசைகள் அத்தனையும் மறைந்து, ஒருவித நிறைவு ஏற்பட்டிருந்தது.

ஒருநாள் அவர் பிரார்த்தனை செய்தபோது கடவுள் எதிரே வந்து நின்றார். "உனக்கு ஏதாவது வேண்டுமா?" என்று கேட்டார். துறவிக்குக் குழப்பம். "நான் ஆசையுடன் வரம் வேண்டி தவம் இருந்தபோது நீங்கள் வரவில்லை. இப்போது எனக்கு ஆசைகளே இல்லை. இப்போது வந்து வரம் தருகிறீர்களே, ஏன்?" என்று கேட்டார். "உன்னை நான் சந்திப்பதற்குத் தடையாக இருந்ததே அந்த ஆசைகள்தான்" என்றார் கடவுள்.

நிறைவு தரும் ஆசைகளுடன் வாழ்வதே நிம்மதிக்கான வழி.

# ஆசையும் வெற்றியும்!



## - அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி

✸ நேர்மையான ஆசை, அதை அடைவதற்கான திட்டமிடல், அதை நோக்கிய செயல்... இதுதான் வெற்றிக்கான சூத்திரம்!

✸ ஆசைகளை அடியோடு ஒழிப்பது அவ்வளவு எளிதான செயல் அல்ல. அப்படிச் செய்ய வேண்டிய அவசியமும் இல்லை. அதற்கு பதிலாக, நம் உள்ளத்தில் எழும் ஆசைகளைச் சீரமைத்து வளமான வாழ்க்கை வாழ்வதே அறிவார்ந்த செயல்.

✸ தேவையைக் காரணமாகக் கொண்டு எழுந்த ஆசை, தேவை நிறைவோடு நின்றுவிட வேண்டும். ஆனால் தேவை நிறைவின்போது ஏற்பட்ட இன்பத்தில் உயிர் மயங்கிவிடுகிறது. அதன்பிறகு உண்மையான தேவை இல்லாமலே ஆசை எழுகிறது. இந்த ஆசையைத்தான் கட்டுப்படுத்த வேண்டும்.

✸ உயிராற்றல் தேவைக்கும், துன்பத்தைத் தீர்க்கவும், உயர்வான லட்சியங்களுக்கும் ஆசைப்படுவது நல்லதே! இவை தவிர்த்த பிற ஆசைகள் அனைத்தும் அறிவின் மயக்கத்தால் தோன்றுவன. அவை துன்பத்தையே தரும்.

✸ தேவையற்ற ஆசை மனதில் எழுந்தால், 'இந்த ஆசை எழுந்ததே தவறு. இதை நிறைவு செய்தால் பல துன்பங்கள் வருமே... எனவே இதை நான் விட்டு விடுவேன்' எனத் தெளிவாகத் தீர்மானிக்க வேண்டும். பிற்காலத்தில் எப்போதாவது இந்த ஆசை மனதுக்குள் எட்டிப் பார்த்தாலும், இந்தத் தீர்மானம் ஞாபகத்துக்கு வந்து உங்களை நெறிப்படுத்தும்.

✸ உங்களுக்குத் தேவையும் வசதியும் நிறைய இருக்கலாம். ஆனாலும், ஓர் ஆசையை அடைந்தால் அதன் பின்விளைவுகள் தீமையே தரும் என்றால், அந்த ஆசையைத் துறந்துவிடுங்கள்.

✸ நிறைவும் செய்யாமல், துறந்தும் விடாமல் ஆசையை மனதில் சுமந்து கொண்டிருந்தால் மன அமைதி கெடும்; இதனால் உடலும் நோய்களின் வரவேற்பறை ஆகிவிடும். எந்தச் செயலையும் முழுமையாகச் செய்யமுடியாமல் தோல்வி அடைவீர்கள்.

✸ ஒவ்வொருவருடைய மனமும் சில நிமிடங்களுக்குள், நூற்றுக்கணக்கான ஆசைகளை அசைபோட்டுப் பார்த்துச் சலனப்படுகிறது. அவற்றில் ஒரு சில ஆசைகளை நம் உடலால் ஏற்றுச் சமாளிக்க முடியாது.

✸ ஆசைகளை மேலும் மேலும் வளர்த்துக்கொண்டே போகக்கூடாது. ஒரு கட்டத்தில் அவை நிறைவேறாமல் போகும்போது, ஏமாற்றத்தில் ஆழ்ந்துவிடுவோம். இப்படி மனதைக் கீழ்நிலைக்குச் செல்லவிடாமல் பக்குவப்படுத்த வேண்டும். ஆசைகளைக் குறைத்துக்கொள்வது அல்லது கட்டுப்படுத்திக்கொள்வது மட்டுமே இதற்கு முதல்படியாக அமையும்.

✸ முதலில் நமது ஆசைகள் நம் நிலைக்கு பொருத்தமானவையாகவும், மன அமைதியைக் கெடுக்காத வகையிலும் அமைவது அவசியம். இரண்டாவதாக, நம் ஆசைகள் பிறரைப் பாதிக்காத வகையில் அமைய வேண்டும். மூன்றாவதாக, இயற்கை நியதிகளை ஒட்டியதாக ஆசை இருத்தல் வேண்டும். இயற்கையின் ஒழுங்குக்கு மீறிய எண்ணங்கள் நிச்சயமாக நம்மைத் தண்டித்துவிடும்.

✸ தகுந்த காரணங்களோடு ஏற்படும் ஆசையாகக்கூட இருக்கலாம். ஆனாலும் அந்த ஆசையைப் பூர்த்தி செய்துகொள்ளும் முயற்சியில் தனக்கோ, பிறருக்கோ துன்பம் நேரக்கூடும் என்றால், அந்த ஆசையும் தடுக்கப்பட வேண்டியதே.

✸ நிறைவேறிய பிறகு தீய விளைவுகளைத் தருகின்ற ஆசைகளையும் கட்டுப்படுத்தியே ஆக வேண்டும்.

✸ ஆசைகளை முறைப்படுத்திவிட்டால் நாம் நலமுடன் வாழலாம். இந்த வாழ்வுக்குப் பிறகும் நன்மைகளைப் பெறலாம். ●



# ஆசையின் நான்கு குணங்கள்!

நல்ல ஆசைகளால் மட்டுமே நம் வாழ்க்கை வழிநடத்தப்பட வேண்டும். அப்போதுதான் நாம் செல்லும் பாதையும், நம் வாழ்வின் நோக்கமும் நெறியுடன் இருக்கும். ஒவ்வொரு நாளிலும் இப்படிப்பட்ட தெளிவுடன் இருக்க வேண்டும்.

நேற்றைய ஆசைகள் மற்றும் செயல்களின் விளைவே நம் இன்றைய இன்பங்களும் துன்பங்களும்! நேர்மையான ஆசைகள் இன்பத்தைத் தரும், தவறான ஆசைகள் துன்பம் தரும். சிலருக்கு மனத்தில் நேர்மையான ஆசைகள் எழும். ஆனால், அவற்றைச் செயல்படுத்தும் மன உறுதி அவர்களுக்கு இருக்காது. அதுவும் அவர்களின் மகிழ்ச்சியைப் பறிக்கும்.

மனத்தின் ஆசைகளே நமக்கு பல தருணங்களில் பிரச்னையை ஏற்படுத்துகின்றன. ஆசைகள் மாறும்போது, செயல்களும் மாறும். நம் வாழ்க்கையும் மாறும். ஆசைகளைப் பற்றிய நான்கு விஷயங்களைப் புரிந்துகொண்டால், நம் வாழ்க்கை வளமாகும்.

- ஒருவருக்குள் எழும் தவறான ஆசைகளே அவரது வாழ்க்கையைத் திசைமாற்றுகின்றன. தவறான ஆசைகளால் பாதை மாறித் தங்கள் வாழ்வைச் சீரழித்துக்கொண்ட ஏராளமான உதாரணங்கள் இங்கு உண்டு. சிறைச்சாலைகளில் இருக்கும் அத்தனைக் கைதிகளும் பேராசையின் தூண்டுதலால் தவறு செய்தவர்கள்தான். தவறான ஆசைகள் தானாகவும் எழும், மோசமான நண்பர்களாலும் விதைக்கப்படும். மனத்தைத் தெளிவாக வைத்திருக்க வேண்டும். நம் மனத்தைச் சலனப்படுத்த ஏராளமான பொருட்களும் காட்சிகளும் இங்கு இருக்கின்றன. கவனமாக விலகிச் செல்லக் கற்றுக்கொள்ள வேண்டும்.

- ஆசைகள் சக்தி வாய்ந்தவை. ஒரு சங்கிலியில் கட்டி இழுத்துச் செல்லப்படும் பூனை போல உங்களை அவை இழுத்துச் சென்றுவிடும். அதிகாரத்தில் இருந்தபடி தவறு செய்பவர்களைப் பாருங்கள்... ஆசைகளே அவர்களை அப்படித் தவறு செய்யத் தூண்டுகின்றன. நம் வாழ்வில் எத்தனையோ விஷயங்கள் நம் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டவையாக உள்ளன. ஆசைகளும் அப்படி ஆகிவிடக்கூடாது. நம் ஆசைகள் அனைத்தும் நம் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும் என்று ஆசைப்படுங்கள்.

- நம் மனம் என்பது நிலம் என்றால், ஆசைகள் எல்லாம் விதைகள். நீர் பாய்ச்சி, உழுது பண்படுத்தப்பட்ட நிலத்தில் நாம் விதைக்கும் நல்விதைகளைவிட களைகளே அதிகம் வளர்கின்றன. அவையே வேகமாகவும் வளர்கின்றன. களைகளை அழித்துவிட்டு, விதைத்த விதைகளுக்கு உரமிட்டு வளர்ப்பவரே நல்ல விவசாயி. நேர்மையான ஆசைகளை மனத்தில் விதைத்து வளர்க்கும் நல்ல விவசாயி போல நாம் இருக்க வேண்டும்.

- நற்செயல்கள் செய்து நல்ல பெயரை வாங்குகிறோமா, அல்லது தவறுகள் நிறைய செய்து சாபங்களைச் சேர்க்கிறோமா என்பதை ஆசைகளே முடிவு செய்கின்றன. நமது மிகச்சிறந்த நண்பர்களோ, எதிரிகளோ வெளியில் இல்லை. சரியான ஆசைகளுடன் நேர்மையாக வாழ்ந்தால், நாம்தான் நமது மிகச் சிறந்த நண்பன். தவறான ஆசைகளுடன் மோசமான பாதையில் போனால், நாம்தான் நமது மிக மோசமான எதிரி. உங்களின் நம்பர் 1 எதிரியை நீங்களே உருவாக்க வேண்டாம். எப்போதும் உங்களின் மிகச்சிறந்த நண்பனாக மட்டுமே இருங்கள். ●

# ஆசைகளின் எல்லை எது?

ஒரு சிறுநகரத்தில் ராமு, சோமு என்ற இரண்டு சகோதரர்கள் வாட்ச் கடை வைத்திருந்தனர். ராமு கடையின் முன்பக்கம் அமர்ந்து வாட்ச்களை விற்பார். சோமு கடையின் பின்பக்கத்தில் தூரமாக அமர்ந்து, வாடிக்கையாளர்கள் பழுதுபார்க்கக் கொடுத்த வாட்ச்களைச் சரிசெய்துகொண்டிருப்பார்.

கடைக்கு வரும் வாடிக்கையாளர்கள், வாட்ச்களை எடுத்துக்காட்டுமாறு ராமுவிடம் சொல்வார்கள். "எனக்குக் காது சரியாகக் கேட்காது. கொஞ்சம் சத்தமாகச் சொல்லுங்கள்" என்பார் ராமு. ஆனால், உண்மையில் அவருக்குக் காது நன்றாகவே கேட்கும்.

கடைக்கு வரும் வாடிக்கையாளர் தேடிப் பிடித்து ஒரு வாட்ச்சை எடுத்து அதன் விலையை ராமுவிடம் விசாரிப்பார். ராமு தனக்கு விலை தெரியாத மாதிரி நடிப்பார். கடைக்குப் பின்னால் வாட்ச் ரிப்பேர் செய்துகொண்டிருக்கும் சோமுவிடம், "இந்த வாட்ச் என்ன விலை?" என்று சத்தமாகக் கேட்பார். சோமு அங்கிருந்து "என்னூறு ரூபாய்" என்று சத்தமாகச் சொல்வார். அது வாடிக்கையாளருக்கும் கேட்கும். ராமு வாடிக்கையாளர் பக்கம் திரும்பி, "முந்நூறு ரூபாயாம்" என்பார்.

அந்த நேரத்தில் வாடிக்கையாளருக்கு சபலம் வந்துவிடும். 800 ரூபாய் வாட்ச், வெறும் 300 ரூபாய்க்குக் கிடைக்கிறதே என்று மகிழ்வார். ராமுவின் கேளாக் காதுக்கு நன்றி சொன்னபடி, உடனே பணத்தைக் கொடுத்துவிட்டு வாட்ச்சை வாங்கிக்கொண்டு வேகமாகக் கிளம்பிச் செல்வர். ராமுவும் சோமுவும் மனதுக்குள் சிரித்துக்கொள்வார்கள். காரணம், அந்த வாட்ச்சின் உண்மையான விலை வெறும் 200 ரூபாய்தான். அவர்கள் இப்படித் தங்களுக்குள் பேசி வைத்துக்கொண்டு நாடகம் நடத்தித் தந்திர வியாபாரம் செய்கிறார்கள்.

இது வேறொரு தந்திர வியாபாரியின் கதை. ஒரு நகரத்தில் இருக்கும் பேருந்து நிலையத்தில் பழ வியாபாரம் செய்கிறார் முதியவர் ஒருவர். ஒவ்வொரு பேருந்திலும் பழக்கூடையுடன் ஏறி, பழங்களைக் கூவி விற்பார். ஒரு நாள் அப்படி கொய்யாப்பழங்களுடன் ஒரு பேருந்தில் ஏறினார். "ஐந்து பழங்கள் இருபது ரூபாய்" என்று கூவி, பழங்களை விற்க முயன்றார். அவரைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தாலும், பயணிகள் யாரும் பழம் வாங்கவரவில்லை. கூடையைச் சுமக்க முடியாமல் சுமந்தபடி முதியவர் சோகமாகக் கீழே இறங்கினார்.

அடுத்த நிமிடமே சுறுசுறுப்பான ஓர் இளைஞன் பேருந்தில் ஏறினான். "ஆறு கொய்யாப்பழம் இருபது ரூபாய்" என்று கூவினான். 'ஆப்பிளைவிடச் சத்தான பழம்... நம்ம ஊரு பழம்' எனக் கொய்யாப்பழத்தின் மகிமைகளை உரக்கச் சொன்னான். நிறைய பேர் அவனிடம் போட்டி போட்டுக்கொண்டு பழம் வாங்கினர்.

இதற்கிடையே மற்றொரு பேருந்தில் ஏறிய முதியவர், அங்கும் "ஐந்து பழங்கள் இருபது ரூபாய்" என்று விற்க முயன்றார். அங்கும் அவரிடம் யாரும் வாங்கவில்லை. அடுத்து அந்த இளைஞன் பேருந்தில் ஏறி, "ஆறு கொய்யாப்பழம் இருபது ரூபாய்" என்று சொல்லி நிறைய பழங்களை விற்றான்.

எம்.பி.ஏ., படித்த வியாபார ஆலோசகர் ஒருவர் இந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தார்.





முதியவரைக் கூப்பிட்ட அவர், “அந்த இளைஞனின் சாமர்த்தியம் உங்களிடம் இல்லை. அவனுக்குப் போட்டியாக நீங்களும் அதே விலைக்கு விற்க வேண்டும். அதிக பழங்களைக் கொள்முதல் செய்தால், அவனைவிடக் குறைந்த விலைக்கு உங்களால் விற்க முடியும். அதிக லாபத்துக்கு பேராசைப்படாதீர்கள். லாபத்தைக் குறைத்து அதிக விற்பனை செய்யப் பழகுங்கள்” என்று ஆலோசனை சொன்னார்.

முதியவர் சிரித்தபடி பதில் சொன்னார். “அந்த இளைஞன் வேறு யாருமில்லை. என் மகன்தான். இந்தப் பழங்களும் அவனுடையவைதான். ‘ஆறு பழம் இருபது ரூபாய்’ என்று விற்றால், உடனே வாங்குவதற்கு மக்களுக்கு மனம் வராது. அதனால் நான், ‘ஐந்து பழம் இருபது ரூபாய்’ என்று கத்திக்கொண்டு போவேன். பிறகு அவன் வந்து, ‘ஆறு பழம் இருபது ரூபாய்’ என விற்பான். விலை குறைவு என்பதால் மக்கள் வாங்குவார்கள். மக்கள் மனதை மாற்றவே என்னை முன்னால் அனுப்புகிறான். இது ஒரு தந்திரம்” என்றார் முதியவர்.

ஆசை என்பது நெருப்பைப் போன்றது. அந்த நெருப்பு அரிசியை பக்குவமாகச் சமைக்கவும் செய்யும். தவறாகப் பயன்படுத்தினால் வீட்டையும் எரிக்கும். நல்ல ஆசைகள் மட்டும் இருக்கட்டுமே என்று நினைத்தாலும், அதன் கூடவே தீய ஆசைகளும் சேர்ந்தே வருகின்றன. தீய ஆசைகள் நல்ல ஆசைகளை அழிக்கும் சக்தி பெற்றவை. ஏனென்றால் பலரும் தீய ஆசைகளின் பக்கமே சாய்கிறார்கள்.

நாம் அதிகாலையில் உறக்கத்திலிருந்து விழித்ததும் நம் ஆசைகளும் விழித்துக்கொள்கின்றன. பல ஆசைகள் பேராசை என்று நமக்கே தெரியும். அவற்றால் மனதுக்கு அமைதி ஏற்படுவதில்லை என்பது தெரிந்தாலும், அவற்றின் பிடியிலிருந்து விடுபட முடிவதில்லை. நதியில் பெருகும் வெள்ளம் போல அவை மூழ்கடித்து மூச்சுத் திணறச் செய்யும் என்ற எச்சரிக்கை உணர்வு வேண்டும்.

களங்கமற்ற குழந்தைகள் மனதில் ஆசைகள் இருப்பதில்லை. வளர வளர, நம்மைவிட வேகமாக நம் ஆசைகள் வளர்ந்துகொண்டே வருகின்றன. இளைஞர்கள், முதியவர்கள் என்று எந்த வயதில் இருப்பவரையும் ஆசைகள் விட்டுவைப்பதில்லை. ஆசைகளின் எல்லை உணர்ந்து அவற்றைக் கட்டுப்படுத்த வேண்டும். அதற்கான வழிகளைத் தேடி அடைபவர்களே, மன நிம்மதி பெறுகின்றனர். ●


RAMRAJ காட்டன்

# வெண்மை

VENMAII

தமிழ் மாத இதழ்

மலர் 7 இதழ் 1

ஜூலை 2022

பதிப்பாளர் - கௌரவ ஆசிரியர்

**கே.ஆர்.நாகராஜன்**

ஆசிரியர்

**த.செ.ஞானவேல்**

இதழாசிரியர்

**வள்ளி**

வடிவமைப்பு

**உதயா**

புத்தக ஆக்கமும் வடிவமைப்பும்:
தரு மீடியா (பி) லிட்.,
10/55, ராஜ் தெரு,
மேற்கு மாம்பலம்,
சென்னை - 600 033
email: contacttharu@gmail.com



இந்தப் புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பதிப்பாளரின் எழுத்துப்பூர்வமான முன் அனுமதி பெறாமல் மறுபிரசுரம் செய்வதோ, அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களில் மறுபதிப்பு செய்வதோ காப்புரிமைச் சட்டப்படி தடை செய்யப்பட்டதாகும்.



Published by
K.R. NAGARAJAN,
Published from
10, Sengunthapuram
Mangalam Road,
TIRUPUR - 641 604.
Ph: 9842274137

# ட்விட்டர் ஆசை

**@Ramya03775109**

அதிகமாய் ஆசைப்படும்போதுதான், வாழ்க்கை எளிதாக ஏமாற்றிவிடுகிறது!

**@Allwar_Ajith**

உழைக்கும் ஆசை வந்துவிட்ட ஒருவரிடம் வேறு எந்த ஆசைக்கும் இடம் இருக்காது!

**@sankarguruu**

ஆசையை அடக்கிவிடத் தெரிந்தால், எல்லாம் நம் காலடியில் கிடக்கும்!

**@mgspooja**

குழந்தையாக இருக்கும்போது ஆயிரம் ஆயிரம் ஆசைகள்... வளர்ந்த பிறகு ஒரே ஒரு ஆசை மட்டுமே, ‘குழந்தையாகவே இருந்திருக்கலாமே’ என்று!

**@koolu_twitz**

தன் பலம் மறந்து பாகன் மீது யானை செலுத்தும் அன்பைப் போல மாசற்ற அன்பை அனைவர் மீதும் செலுத்திட ஆசை!

**@Qalbi_zm**

பிறர் உன்னைத் திரும்பிப் பார்க்க வேண்டும் என்ற ஆசை இருந்தால், நீ யாரையும் திரும்பிப் பார்க்காமல் உன் வேலையை மட்டும் பார்க்க வேண்டும்.

**@_SUMI_Twitz_**

ஆசை இருக்கலாம், பேராசை இருக்கக்கூடாது. அது அதலபாதாளத்தில் தள்ளிவிடும் என்பதைக் காலம்தான் உணர்த்தும்!

**@sThivagaran**

ஆசைகள் அத்தனையும் அனுபவித்துத் தீர்த்த பின் நானும் புத்தனாவேன்... அதுவரை பொறுத்திரு என் போதி மரமே!

**@mujib989898**

அளவுக்கு அதிகமாக உழைக்கத் தயாராக இருந்தால், தகுதிக்கு மீறிய ஆசைகள்கூடத் தவறில்லை.

**@SaranyaaaRaj**

நிறைவேறாதென்ற போதும் குறையாமல் நிறைந்துகொண்டே இருக்கும் ஆசைகள் எல்லாம் என்ன மாதிரியான சாப நிலையோ..?

**@Vasanth920**

நாம் சிறுவயதில் சொன்ன அத்தனை பொய்களும் நம் ஆசைகள்தான்.

**@Saraa_Ram22**

ஆசைகள் அற்ற இடத்திலே, குற்றங்கள் குறைந்துபோகின்றன.

**@m_a_h_e_s27**

ஆசைகள் இல்லாத மனிதன் அரசன் ஆகின்றான்.

**@Manivannan__K**

வறுமை வருவது செல்வம் குறைவதால் அல்ல... ஆசைகள் அதிகரிப்பதால்தான்!

**@saattooran**

நிறைவேறிய ஆசைகளை அனுபவிக்கத் தெரியாதவன் மனிதன். தகுதிக்கு மீறிய ஆசைகள் மனிதனை நிம்மதியாக வாழவிடாது. நியாயமான ஆசைகள் வாழ்வை வளமாக்கும். அளவறிந்து ஆசைப்படுங்கள்!

**@its_yazhini**

கற்பனை என்ற போர்வைக்குள் ஒளிந்திருக்கின்றன... நம் நிறைவேறாத ஆசைகள்!

**@saattooran**

வரம்பு மீறிய ஆசைகள் வாழ்க்கையைத் தடம் புரட்டிவிடும். அனைத்துக்கும் ஆசைப்படாதீர்கள், வாழ்வின் அவசியத்திற்கு மட்டும் ஆசைப்படுங்கள்!

**@weknowth827**

கிடைக்காத ஒன்றின் மீதான ஆசை எப்போதுமே குறைவதே இல்லை. ஒரு நெருடலாகவே மனதைத் துன்புறுத்திக்கொண்டே இருக்கும். நிறைவுறாத ஆசைகள் என்றுமே நிம்மதியைத் தருவதில்லை.

**@little_heartsss**

ஆசைகள் குறையக் குறைய அமைதி பெருகும்.

**@pithamakal**

ஆசைகள் நிறைவேறாமல் போகும்போதெல்லாம் அவ்வப்போது துறவியாகிப் போகிறேன்!

**@THANIMAI_TWEET**

கைக்கு எட்டாத தூரத்தில் என் ஆசைகள் இருந்தாலும், அவற்றை எட்டிப் பிடித்துவிடும் தைரியம் என்னிடம் உண்டு... அதுவே என் தன்னம்பிக்கை!

**@queen_tweets27**

மனம் கூட ஒரு கல்லறைதான்... அங்கே தினம் தினம் பல ஆசைகள் புதைக்கப்படுகின்றன. ●


RAMRAJ
Littlestars®
MANOHARAM
KIDS MATCHING DHOTI & SHIRT
Clothes that Smile
RAMRAJ
COTTON


RAMRAJ
gENXT
READYMADE POCKET DHOTIS
The Symbol of
Tradition
for Every
Moment
FOR EASY STICK
DHOTI WITH POCKET
POCKET FOR WALLET & MOBILE





Crafted for comfort

LINEN PARK®

DHOTIS • SHIRTS • TROUSERS • FABRICS

A Premium Product from

RAMRAJ©


அவனுள்
அவள்
ராம்ராஜ் ஷோரூமில் இளைய
தலைமுறை பெண்களுக்கான பிரத்யேக
பிரமாண்ட ஆடை கலெக்ஷன்கள்
எழில் ஊட்டும் வண்ணங்களில் ரம்யம்
புத்தம் புதிய பிரிவு கூடுதலாக
அமைக்கப்பட்டுள்ளது.
புடவைகள்
லெக்கின்ஸ் • உள்ளாடைகள்
Ramyyam®
COTTON - SILK SAREES
Product by
RAMRAJ©
www.ramrajcotton.in

# நல்ல ஆசையும் பொல்லாத ஆசையும்!



‘சுவரை விற்றுச் சித்திரம் வாங்கக்கூடாது’ என்பார்கள். ஆசைகள் குறித்தும் இப்படிப் பாடல்கள் உண்டு. ‘தூக்கம் விற்றுத்தானே ஒரு கட்டில் வாங்க ஆசை... தூண்டில் விற்றுத்தானே மீன்கள் வாங்க ஆசை... நாக்கை விற்றுத் தேனை வாங்கி, நீரை விற்றுத் தாகம் வாங்கி, பூவை விற்று வாசம் வாங்கி, தாயை விற்றுப் பாசம் வாங்கி, பூட்டை விற்றுச் சாவி வாங்கும் பொல்லாத ஆசை ஆசை’ என்ற பாடல், மனிதர்களுக்கு ஏற்படும் ஆசைகளின் இயல்பை விளக்குகிறது.

பொல்லாத ஆசையில் மூன்று நிலைகள் உள்ளன. முதல் நிலை, ஒரு பொருள் வேண்டும் எனத் தோன்றுதல். இரண்டாவது நிலை, அப்பொருள் எப்போதும் நம்மிடமே இருக்க வேண்டும் எனத் தோன்றுதல். மூன்றாவது நிலை, அது இல்லாமல் நம்மால் வாழ முடியாது என்ற அளவுக்குத் தீவிரமாக நினைத்தல். இத்தகைய ஆசை மனிதனின் எதிரியாகும். நல்ல ஆசைகளை நினைக்கும்போது, ‘இந்த ஆசை என்றோ ஒருநாள் நிஜமாகும்’ என்ற நம்பிக்கையுடன் உழைக்க முடிகிறது. பொல்லாத ஆசைகளோ, ‘இந்த ஆசை தீராவிட்டால் எனக்கு நிம்மதி இல்லை’ என்கிற அளவுக்கு வெறியை ஏற்படுத்துகின்றன.

**பொல்லாத ஆசைகளைக் கண்டறிந்து மனத்திலிருந்து விரட்டுவதற்கு சில வழிகள் உள்ளன:**

- ஒரு மரத்தை வெட்ட, முதலில் அதன் கிளைகளை வெட்ட வேண்டும். அதன்பிறகு அடிமரத்தை வெட்டி அகற்றுவது சுலபம். அதேபோல் ஆசை என்ற மரத்தை வெட்ட, முதலில் அதன் கிளைகளான விருப்பு வெறுப்புகளை வெட்ட வேண்டும்.
- கடவுள் பக்தி உள்ளவர்கள், ‘நமக்கு என்ன வேண்டுமோ, அதை இறைவன் கொடுப்பார்’ என்று கடவுளிடம் சாய்ஸை விட்டுவிட்டுப் பொல்லாத ஆசைகளை விரட்டலாம். மற்றவர்கள், ‘நமக்கு எது நன்மை தருமோ, அது நிச்சயம் நிறைவேறும்’ என்று நினைத்து ஒதுங்கலாம்.
- பிடிவாத குணம் கொண்டவர்கள் மனத்தில்தான் பொல்லாத ஆசைகள் அதிகம் எழும். ‘வேண்டும், வேண்டாம்’ என்பதில் பிடிவாதமாக இருக்கக்கூடாது. ஒவ்வொன்றின் விளைவுகள் அறிந்து செயல்பட வேண்டும்.
- ஒரு வீட்டுக்கு வந்திருக்கும் விருந்தினர், அந்த வீட்டு நிகழ்வுகளில் பட்டும் படாமல் நடந்துகொள்வார். ஆசைகள் விஷயத்தில் இப்படித்தான் இருக்க வேண்டும். ஆசைக்கு அடிமை ஆகாமல், விலகி நின்று அதைப் பாருங்கள். அப்போதுதான் அது சரியா, தவறா என்பது புரியும்.
- நமக்கு என்ன கிடைக்க வேண்டுமோ அதுவே கிடைக்கும் என்பதில் நம்பிக்கை கொள்ளுங்கள். ‘இது கட்டாயம் வேண்டும்’ என்று முரண்டு பிடிப்பதால் ஏற்படும் விளைவுகளை யோசித்துப் பாருங்கள். ஆசையை வேரறுத்துவிடுவீர்கள். ‘எனக்கு இது வேண்டும், இது வேண்டாம்’ என்பதில் தெளிவாக இருங்கள்.
- ஓர் ஆசை எழுகிறது. அதைப் பின்தொடர்ந்தால் நமக்கு நன்மை கிடைக்குமா, அல்லது பிரச்னைகள்தான் மிஞ்சுமா என்று அலசிப் பாருங்கள். இறுதியில் நமக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும் ஆசைகளை மட்டுமே பின்தொடருங்கள்.
- கார் ஓட்டவே தெரியாதவர் கார் ரேஸில் ஜெயிக்க நினைப்பது போல, இன்று நம் கைகளில் இல்லாத ஒரு விஷயத்தைப் பற்றி ஆசைப்படுவது அபத்தம். நம்மால் அடைய முடியாது என்று சந்தேகம் எழும் எந்த ஆசையையும் துறந்துவிடுவது உத்தமம். ●

# ஆசைக்கு ஏது வேண்டும்?

அறிஞர் சாக்ரடீஸை இளைஞன் ஒருவன் நெருங்கினான். ''வாழ்க்கையில் சாதிக்க ஆசைப்படுகிறேன். அதற்கான அறிவும் திறமையும் எனக்கு எப்படிக் கிடைக்கும்?" என்று கேட்டான். சாக்ரடீஸ் அமைதியாக அவனை நிமிர்ந்து பார்த்து, "என்னுடன் வா" என்று சொன்னபடி நடக்க ஆரம்பித்தார். அவன் பின்னால் போனான். ஊர் எல்லையில் இருந்த குளத்தை அடைந்த சாக்ரடீஸ், குளத்துக்குள் இறங்கி நடந்தார். அவனும் பின்னாலேயே போனான்.

கழுத்து வரை மூழ்கும் அளவுக்குத் தண்ணீருக்குள் போனவர், சட்டென்று அந்த இளைஞனின் கழுத்தைப் பிடித்து அவன் தலையைத் தண்ணீருக்குள் அழுத்தினார். இதை எதிர்பார்க்காத அவன் மூச்சுவிடத் திணறினான். நிறைய தண்ணீரைக் குடித்து, தடுமாறி, செத்துப் போய்விடுவோமோ என்று பயந்த கடைசி நிமிடத்தில் சாக்ரடீஸின் பிடியை உதறிக்கொண்டு மேலே வந்தான். வேகமாக கரைக்கு ஓடி, நன்கு மூச்சை இழுத்துவிட ஆரம்பித்தான்.


"உன்னைக் கொல்வது என் நோக்கமில்லை. அனுபவப் பாடமாக இதைக் கற்றுக்கொடுக்க நினைத்தேன். தண்ணீருக்குள் மூழ்கிய நேரத்தில் உனக்கு எது அவசியமாகத் தேவைப்பட்டது?" என்று சாக்ரடீஸ் கேட்டார். "மூச்சுக்காற்று" என்றான் அவன். "அதுபோல அறிவை அடைய ஆசைப்பட்டால் நிச்சயம் அடையலாம்" என்றார் சாக்ரடீஸ்.

இந்த வாழ்க்கையில் நீங்கள் ஏதாவது சாதிக்க நினைத்தால், மூச்சுக்காற்று போல அதை நினைத்து இன்றே அதற்காக உழைக்கத் தொடங்குங்கள். நம்பிக்கையைவிட, திறமையைவிட, ஆசையே பல சாதனைகளுக்குக் காரணமாக இருக்கிறது. இதைச் செய்தே தீர வேண்டும் என்று மனத்தில் ஆசை ஏற்படும்போது, அதைச் சாதிக்கும் வழி தெரிகிறது. நேர்மையான ஆசையை எப்படி நிறைவேற்றுவது என்ற வழி தெரியாமல்தான் பலர் தோற்றுப் போகிறார்கள்.



கண்டக்டரின் விசில் சத்தம் கேட்டதும் பேருந்து நகர்வது போல, ஏதோ ஒன்று நமக்கு வெளியில் நடந்தால்தான் நம்மால் முன்னேற முடியும் என்று நிறைய பேர் நினைக்கிறார்கள். காத்திருப்பதில் அர்த்தமில்லை. அடுத்த வாய்ப்பு எப்போது வந்து கதவைத் தட்டும் என்று எதிர்பார்க்காமல், இப்போது கையில் இருக்கும் வாய்ப்பைப் பயன்படுத்துங்கள். நம் முழுமையான முயற்சியைப் பயன்படுத்துவதைவிடச் சிறந்த விஷயம் வேறெதுவும் இல்லை. இன்று நாம் எதையும் செய்யாமல் சும்மா இருந்தால், நாளை என்பது கிடையாது. நாளைய மனிதர்களுக்காகக் காத்திருக்காமல், இன்றைய மனிதர்களுடன் இந்த நாளைக் கொண்டாடுங்கள். நாளைய செயல்களின் விளைவுகளுக்காகக் காத்திருக்காமல், இன்றைய செயல்களைச் செய்யுங்கள். நாளைய மாற்றங்களில் நம்பிக்கை வைக்காமல், இன்றைய தினத்தை மாற்றுவதற்கான உழைப்பைக் கொடுங்கள்.

ஒவ்வொரு மனிதரின் வாழ்க்கையும் ஒரு கதை. அதைச் சிறப்பாக எழுதுவதற்கான வாய்ப்பும் அவருக்கே கிடைத்திருக்கிறது. நம் கடந்த காலத்தைவிட எதிர்காலத்தைச் சிறப்பாக மாற்றிவிட வேண்டும் என்பதே ஒவ்வொருவரின் ஆசையாகவும் இருக்கும். இன்று நாம் எந்த இடத்தில் இருக்கிறோம் என்பதை நினைத்துப் பாருங்கள். இன்று நாம் சிறப்பாகக் கொடுக்கும் ஓர் உழைப்பை ஒரு வாரத்துக்கு முன்பாகவே கொடுத்திருந்தால் இன்று எங்கே இருந்திருப்போம்? நினைத்துப் பாருங்கள். ஒரு மாதத்துக்கு முன்போ, ஒரு வருடத்துக்கு முன்போ, ஐந்து வருடங்களுக்கு முன்போ இப்படி உழைத்திருந்தால், இன்று நாம் எங்கே இருந்திருப்போம். கிடைக்கும் பதில் நம்மை வேதனையில் ஆழ்த்தலாம். இன்னும் சில ஆண்டுகள் கழித்து இப்படி ஒரு கேள்வியைக் கேட்டுக்கொள்ளும்போது வருந்தும் சூழல் வரக்கூடாது. அந்தத் தெளிவு இருந்தால் போதும். நியாயமான ஆசைகளை நிறைவேற்றும் தாரக மந்திரம் இதுதான்.





ஒரு கிராமத்தில் இரண்டு சகோதரர்கள் இருந்தார்கள். அண்ணன் உடல்வலிமை கொண்டவனாக இருந்தான். வீட்டு வேலைகளில் பெற்றோருக்கு உதவிகள் செய்வான். நன்கு சாப்பிடுவான். தம்பியோ பிறக்கும்போதே நோஞ்சான். கற்றல் திறன் குறைபாடு கொண்டவன் என்பதால், எல்லாவற்றையும் மெதுவாகவே செய்வான்.

அந்தக் கிராமத்தை ஒட்டி ஆறு ஒன்று ஓடியது. மறுகரை எங்கே இருக்கிறது என்பது தெரியாத அளவுக்கு பிரமாண்டமான ஆறு. அந்த ஆற்றில் அண்ணனும் தம்பியும் அடிக்கடி போட்டி வைத்துக்கொள்வார்கள். ‘யார் முதலில் நீந்தி மறுகரையை அடைவது’ என்பது போட்டி. நீந்தும்போதே பயத்தில் யார் முதலில் கிளம்பிய இடத்துக்கே திரும்பி வருகிறார்களோ, அவர் தோற்றதாக அர்த்தம். எனவே, நீந்த ஆரம்பிக்கும்போதே, திரும்பி வருவதற்கான சக்தியையும் சேமித்து வைத்திருக்க வேண்டும்.

ஒவ்வொருமுறை போட்டி நடத்தும்போதும், தம்பிதான் பயத்தில் முதலில் திரும்பி வருவான். கொஞ்ச தூரம் போனதுமே அவனுக்கு கால்கள் வலிக்க ஆரம்பிக்கும், மூச்சுத் திணறும். கரைக்குத் திரும்பியதும் அண்ணன் அவனைப் பார்த்துக் கிண்டலாகச் சிரிப்பான்.

கடைசியாக ஒருமுறை அவர்களுக்குள் போட்டி. இம்முறை தம்பியிடம் வழக்கமான தவிப்பு இல்லை. கால்கள் வலிக்கிறது என்று புலம்பவில்லை. இயல்பாக மூச்சுவிட்டபடி நீந்த ஆரம்பித்தான். எப்படியும் அவன் திரும்பிவிடுவான் என்று எதிர்பார்த்த அண்ணனுக்கு அதிர்ச்சி. வழக்கத்தைவிட வேகமாக அவன் நீந்திக்கொண்டிருந்தான்.

அண்ணனுக்கு இப்போது பயம் வந்தது. “டேய் தம்பி! நாம் வழக்கத்தைவிட நீண்ட தூரம் வந்துவிட்டோம். திரும்பிப் பார்த்தால், நாம் கிளம்பிய கரையே தெரியவில்லை'' என்றான். தம்பி நிதானமாக, “ஏன் திரும்பிப் பார்க்கிறாய்? மறுகரையை அடைய வேண்டும் என்பதுதானே போட்டி. நாம் கிளம்பிய கரை எங்கே இருந்தால் என்ன?” என்று கேட்டான்.

‘‘அதற்காக இல்லை. முடியவில்லை என்றால் திரும்பிப் போக வேண்டும் அல்லவா? அதனால் பார்த்தேன்'' என்றான் அண்ணன். ‘‘நீ தோல்வியை ஒப்புக்கொண்டு திரும்பப் போகிறாயா?” என்று தம்பி கேட்டதும் அவனுக்கு ரோஷம் வந்தது. “இல்லை” என்று சொல்லிவிட்டு தொடர்ந்து நீந்தினான்.

இப்படியே விவாதம் செய்தபடி அவர்கள் நீந்தினார்கள். ஒரு கட்டத்தில் அண்ணன் ரொம்பவே பயந்து, ‘‘வா தம்பி! திரும்பிப் போய்விடலாம்'' என்றான். தம்பி உறுதியாக, “முடியாது. இப்போது மறுகரைதான் நமக்கு நெருக்கமாக இருக்கிறது. திரும்பிப் போவதைவிட, மறுகரையை அடைவதே நல்லது” என்றான். அண்ணன் பயந்து திரும்புவதற்காக நீந்தும்போது தண்ணீரில் மூழ்கினான். அவனைக் காப்பாற்றித் தன் முதுகில் சுமந்துகொண்டு மறுகரையை அடைந்தான் தம்பி.

கரையை அடைந்த கொஞ்ச நேரம் கழித்து கண்விழித்த அண்ணன், ‘‘எப்படி இதைச் சாதித்தாய்?” என்று தம்பியை அரவணைத்தபடிக் கேட்டான். “இன்று நான் திரும்பிச் செல்வதற்காகச் சக்தியைச் சேமித்து வைக்கவில்லை. உயிரைப் பணயம் வைத்தாவது மறுகரையை அடைந்தே தீர வேண்டும் என்று ஆசைப்பட்டேன்” என்றான் தம்பி.

நீங்கள் முடிவெடுத்துவிட்டால், எந்த ஆசையும் அடையும் இலக்குதான். ஆனால், முடிவெடுக்க வேண்டியது முக்கியம். ●

அமெரிக்காவின் மிகப்பெரிய பணக்காரர் ஒருவரிடம் ஒருமுறை, ''எவ்வளவு பணம் இருந்தால் போதுமானது?'' என்ற கேள்வியைக் கேட்டார் ஒருவர். "என்னிடம் இப்போது இருப்பதைவிட அதிகமான பணம்" என்று பதில் சொன்னார் பணக்காரர்.

பிரான்ஸ் நாட்டை ஆண்ட மன்னர் பதினான்காம் லூயி. ஐரோப்பா கண்டத்திலேயே பெரிய தேசமாக பிரான்ஸ் அப்போது இருந்தது. நீண்ட காலம் அவர் ஆட்சி செய்தார். நாடு வளமாக இருந்தது. விரும்பிய எல்லாமே அவருக்குக் கிடைக்கும் அளவுக்கு அரண்மனை முழுக்கச் செல்வச் செழிப்பு இருந்தது. என்றாலும் அவர் புதுப்புது சட்டங்கள் கொண்டு வந்தார். இன்னும் அதிக அதிகாரங்களுக்கு ஆசைப்பட்டார்.

இப்படி 'இன்னும்... இன்னும் வேண்டும்' என்ற நினைப்பே பல ஆசைகளுக்கு அடித்தளமாக இருக்கிறது. பெரிய மனிதர்களுக்குப் பெரிய பேராசைகள்; எளிய மனிதர்களுக்குச் சிறிய பேராசைகள்.

ஒரு மன்னருக்கு ஒரு வழக்கம் இருந்தது. தினமும் அதிகாலையில் தன் அரண்மனையிலிருந்து வெளியில் வரும்போது எதிர்ப்படும் முதல் மனிதனின் ஆசையைக் கேட்டு அதை நிறைவேற்றுவார். ஒருநாள் அப்படி அவர் வரும்போது, யாசகம் செய்து வாழ்ந்துவரும் துறவி ஒருவர் எதிர்ப்பட்டார். 'துறவிக்கு என்ன ஆசை இருக்கப் போகிறது? ஏதாவது எளிமையாகக் கேட்பார். நிறைவேற்றிவிடலாம்' என்று நினைத்தார் மன்னர்.

துறவியை வணங்கி, தன் வழக்கத்தைச் சொன்னார். "உங்கள் ஆசை என்ன? சொல்லுங்கள், செய்கிறேன்" என்றார். துறவியோ, "வேண்டாம் மன்னரே! உங்களால் முடியாது. வாக்கு கொடுத்துவிட்டு வம்பில் மாட்டாதீர்கள்" என்றார். மன்னருக்குக் கோபம் வந்தது. ''என்னால் முடியாதது இந்த உலகில் இருக்கிறதா? உங்கள் ஆசையைக் கேளுங்கள்" என்றார். "சரி, அப்புறம் உங்கள் இஷ்டம்" என்று சொல்லிவிட்டுத் துறவி தன் கையிலிருந்த பிச்சைப் பாத்திரத்தைக் காட்டினார். "இதில் ஏதாவது தானமாகப் போட்டு இந்தப் பாத்திரத்தை நிரப்புங்கள்" என்றார்.

மன்னர் உடனே தன் அரண்மனைக் கருவூல அதிகாரியை அழைத்தார். "அந்தப் பாத்திரம் நிறைய நாணயங்களைப் போடுங்கள்" என்றார். ஒரு கையளவு நாணயங்களை அள்ளிப் போட்டதும், அப்படியே அதைப் பாத்திரம் வாங்கிக்கொண்டது. இன்னும் கொட்டக் கொட்ட நாணயங்கள் அதற்குள் போய்க்கொண்டே இருந்தன. பாத்திரம் நிரம்பவில்லை. மூட்டை மூட்டையாக நாணயங்களைக் கொண்டுவந்து கொட்டினார்கள். அப்போதும் அது நிரம்பவில்லை. ஒரு சிறிய பாத்திரம் எப்படி இவ்வளவு நாணயங்களை விழுங்குகிறது என்று எல்லோருக்கும் திகைப்பு. மன்னரும் தன் கண் முன்னால் நடப்பதை நம்ப முடியாமல் பார்த்துக்கொண்டிருந்தார்.

அரண்மனை கஜானாவே காலியானது. அதன்பின் தங்கம், வைரம் என நகைகளை எல்லாம் கொண்டுவந்து போட்டார்கள். அரண்மனையில் இனி தானம் செய்வதற்கு எதுவுமே இல்லை என்ற நிலை வந்தது. அப்போதும் அந்த பிச்சைப் பாத்திரம் நிரம்பவில்லை.

வந்திருப்பவர் சாதாரண துறவி இல்லை என்பது மன்னருக்குப் புரிந்தது. அவர் பாதங்களில் விழுந்து வணங்கி, ''என் தோல்வியை ஒப்புக்கொள்கிறேன். யாருடைய ஆசையையும் என்னால் பூர்த்தி செய்ய





முடியாது” என்றார். துறவி சிரித்தார். “ஏன் இந்தப் பாத்திரம் நிரம்பவில்லை” என்று மன்னர் தன் சந்தேகத்தைக் கேட்டார். “நிறைவு இல்லாமல் இறந்துவிட்ட பேராசைக்காரன் ஒருவனின் மனத்தை வைத்து உருவாக்கப்பட்டது இது. அதனால்தான் இப்படி இருக்கிறது. இந்த உலகத்தின் அத்தனை செல்வங்களையும் கொட்டினாலும் இது நிரம்பாது. கவலைப்படாதே, தோல்வியை ஒப்புக்கொண்ட உன் பொக்கிஷங்கள் திரும்ப வந்துவிடும்'' என்று சொல்லிவிட்டுத் துறவி நடந்தார்.

வேலை, தொழில், வியாபாரம், பொழுதுபோக்கு, உறவுகள், சூழ்நிலை என்று எதுவாக இருந்தாலும், அதில் முதலில் நாம் அடைய ஆசைப்பட வேண்டியது திருப்தியும் மனநிறைவும்தான்.

ஒரு வேலையில் இருக்கிறீர்கள் என்றால், இன்றைய நாளில் அந்த வேலையை முழுமையான மனநிறைவு கிடைக்கும் அளவுக்குச் செய்யுங்கள். ஒரு தொழில் செய்கிறீர்கள் என்றால், அதில் நீங்கள் உற்பத்தி செய்வது எதுவாக இருந்தாலும் அதை நிறைவான ஒரு பொருளாக உருவாக்குங்கள். ஒரு வியாபாரம் செய்கிறீர்கள் என்றால், வாடிக்கையாளர்களுக்கு மனநிறைவு ஏற்படும் அளவுக்கு அதைச் செய்து, அதில் நீங்கள் மனநிறைவு அடையுங்கள். ஒரு பொழுதுபோக்கு என்றாலும் அதை மேம்போக்காகச் செய்யாதீர்கள், அதிலேயே மூழ்கியும் விடாதீர்கள். உறவுகளைக் கையாள்வதிலும் முழுமனத்துடன் இருங்கள். அவர்களை அலட்சியப்படுத்தாதீர்கள்.

இப்படி எல்லாவற்றையும் நிறைவுடன் செய்ய ஆசைப்படும்போது உங்கள் மனத்தில் அன்பு பொங்கி வழியும். முகத்தில் மலர்ந்திருக்கும் சிரிப்புடன் இரவில் நிம்மதியாகத் தூங்க முடியும்.

வாழ்க்கை என்பது பலருக்கும் ஒரு தொடர் ஓட்டப்பந்தயம் போலவே ஆகிவிடுகிறது. கல்வியின் பின்னால், வேலையின் பின்னால், பணத்தின் பின்னால், வெற்றியின் பின்னால், புகழின் பின்னால் ஓடிக்கொண்டே இருக்கும் தொடர் பயணம் அது. இதில் ஏதோ ஒரு கட்டத்தில் நிறைவை அடையாதவர்கள், தொடர்ந்து ஓடி ஓடிச் சோர்ந்து போகிறார்கள்.

இந்த ஓட்டம் மட்டுமே பிரதானம் என்று நினைக்கும் சிலரோ, வாழ்வின் மற்ற எல்லா அனுபவங்களையும் இழக்கிறார்கள். குழந்தைகளின் அன்பு, உறவுகளின் அக்கறை, நண்பர்களின் நெருக்கம் என எதுவும் கிடைக்காமல் வாழ்வது அபத்தம் அல்லவா? ஏதோ ஒரு கட்டத்தில் நிறைவடைந்து, எல்லோரையும் திரும்பிப் பார்க்க வேண்டும். மற்றவர்களால் நாம் எப்படி நடத்தப்பட வேண்டும் என்று நினைக்கிறோமோ, அதேபோல நாமும் மற்றவர்களை நடத்துவதுதானே சரி.

யாரோ ஒரு நண்பர் பிரச்னையில் சிக்கித் தவிக்கும்போது, தீர்வு தேட முதலில் அழைக்கப்படுபவராக நீங்கள் இருங்கள். உறவினர் ஒருவர் துன்பத்தில் தவிக்கும்போது உதவி செய்ய ஓடும் முதல் மனிதராக நீங்கள் இருங்கள். நெருங்கிய ஒருவர் சோகத்தில் மூழ்கும்போது ஆறுதல் தேடும் தோள்கள் உங்களுடையவையாக இருக்கட்டும். இதுபோன்ற செயல்களில் கிடைக்கும் நிறைவு, உங்கள் ஆசைகளை நெறிப்படுத்தும். நல்ல நண்பனாக, சிறந்த உறவினராக, இனிய வாழ்க்கைத்துணையாக, அன்பான பெற்றோராக, திறமையான பணியாளராக, நேர்மையான தொழில்முனைவோராக... இப்படி நாம் ஆசைப்பட வேண்டிய தகுதிகள் நிறைய. இவை எல்லாவற்றிலுமே நிறைவு கிடைக்கும் என்பதுதான் சிறப்பு.

## ஆசை தரும் வலி!

**ஆ**சையைப் பெரும்பாலும் மகிழ்ச்சியுடன் இணைத்தே பேசுகிறோம். ஆசைகள் பற்றிய கற்பனைகளே நமக்கு மகிழ்ச்சி தருகின்றன. ஆனால், ஆசை தரும் வலி மோசமானது. நிராசைகள் எப்போதும் இப்படித்தான். உங்கள் குழந்தைக்கு ஐஸ்க்ரீம் வாங்கித் தருவதாகச் சொல்கிறீர்கள். உடனே குழந்தைக்கு எதிர்பார்ப்பு அதிகமாகிறது. அந்த ஐஸ்க்ரீமின் இனிய சுவையை அது கற்பனை செய்து பார்த்து ஆசை கொள்கிறது. சில நிமிடங்களில் நீங்கள் மனம் மாறுகிறீர்கள். "இப்போ ஐஸ்க்ரீம் சாப்பிட்டா ஜலதோஷம் பிடிக்கும். இன்னொரு நாள் சாப்பிடலாம்" என்கிறீர்கள். உடனே குழந்தை கை. கால்களை உதைத்துக்கொண்டு அழுகிறது. ஆசை நிறைவேறாத ஏமாற்றத்தின் வலி அது.

நீங்கள் ஐஸ்க்ரீம் வாங்கித் தருவதாகச் சொல்வதற்கு முன்புவரை, குழந்தைக்கு அந்த எதிர்பார்ப்பு இருந்திருக்காது. ஏமாற்றம் அடையும்போது, "நாமா கேட்டோம்! அவர் வாங்கித் தருகிறேன் என்றார், இப்போது முடியாது என்கிறார். உண்மையில் நாம் இழப்பது எதுவும் இல்லையே' என்ற தெளிவு அந்தக் குழந்தைக்கு இருந்தால், ஏமாற்றம் ஏற்படாது. ஆசைகளை இப்படிப்பட்ட தெளிவுடன் அணுக வேண்டும்.



## ஆசைகளைத் தவிர்க்க வேண்டாம்!

**வ**ளர முடியாதவர்களும், வளர விரும்பாதவர்களும் சில தத்துவங்களைப் பேசி ஆசைகளைத் தவிர்க்க நினைப்பார்கள். "கோடி கோடியாகச் சம்பாதித்து தங்கத்தையும் வைரத்தையுமா தட்டில் போட்டுக்கொண்டு சாப்பிட முடியும்? அதே நான்கு இட்லிதானே சாப்பிடப் போகிறோம்! அதற்கு ஏன் விழுந்து விழுந்து சம்பாதிக்க வேண்டும்?" என்று சிலர் பேசுவார்கள். இன்னும் சிலரோ, "நிறைய சொத்து, பணம் சேர்த்தாலே பிரச்னைதான். இன்கம்டாக்ஸ் தொல்லை ஒரு பக்கம், எந்த நேரத்துல எதுல நஷ்டம் வருமோன்னு கவலை இன்னொரு பக்கம். படுத்தா தூக்கம் வராது. நான் நிம்மதியா இருக்கேன். இதுதானே வேண்டும்" என்று ஏழ்மையில் தவிப்பதை நியாயப்படுத்துவார்கள்.

'மனதால் நிறைவு அடைவதைவிடப் பெரிய செல்வம் எதுவும் இல்லை' என்பார்கள் இவர்கள். ஆனால், வளர்வதற்கான வாய்ப்புகள் பல இருந்தாலும், எல்லாவற்றையும் புறக்கணித்துவிட்டு இப்படிக் கிடப்பது நியாயமில்லை. "என்னால் வளர முடியும். நான் வளர்ந்தால், என்னால் பலர் வளர்வார்கள். இந்தச் சமூகத்துக்கு நான் கொடுப்பது இதுதான்" என்று ஆசைப்படும் எவரும் வளர்ச்சி அடையாமல் இருப்பதில்லை.

## இந்த ஆசைகள் வேண்டாம்!

**நா**ம் ஆசைப்பட்டுச் செய்யும் சில செயல்கள்தான் பலரையும் சங்கடத்தில் ஆழ்த்துகின்றன. நம் வளர்ச்சிக்கும், அடுத்தவர்களுடன் இணக்கமாக வாழ்வதற்கும் தடையாக இருக்கும் இந்த ஆசைகளைத் தவிர்த்துவிடுங்கள்:

- முக்கியமான வேலைகள் இருக்கும்போது, அவற்றைத் தவிர்த்துவிட்டுப் பொழுதுபோக்குகளில் ஆர்வம் காட்டுவது.
- நமக்கு ஊட்டமும் ஆரோக்கியமும் தராமல், வெறும் சுவை மட்டுமே கொண்ட ஆபத்தான உணவுகளைச் சாப்பிடுவது.
- மற்றவர்களைப் பற்றி வம்பு பேசுவது, கருணையற்ற வார்த்தைகளால் விமர்சனம் செய்வது.
- கையில் பணமில்லை என்றாலும், நம் வசதிக்கு அப்பாற்பட்ட பொருட்களைக் கடனிலாவது வாங்கிவிடுவது.
- பொய் பேசும், புகழ்ச்சியான வார்த்தைகளைக் கூறி கவிழ்க்கப் பார்க்கும் மோசடி மனிதர்களை நம்புவது.
- சட்டங்களை மதித்து நடக்காமல் இருப்பது, அநீதியான விஷயங்களுக்கு ஆதரவு அளிப்பது.
- உண்மையில்லாத விஷயங்களை நம்புவது, மற்றவர்களிடமும் அவற்றைப் பரப்புவது.

இந்த ஏழு ஆசைகளும் ஒருவருக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கலாம், ஆனால் அவர் பெயரைக் கெடுத்துவிடும்.



## அதிகம் ஆசைப்படுங்கள்!

'நீங்கள் வாழ்க்கையில் என்னவாக ஆக வேண்டும் என்பதை உங்கள் மனம் விரும்பும். மனம் சொல்வதைக் கேட்டு அதன்படி செயல்படுங்கள்' என்றார் ஆப்பிள் நிறுவனர் ஸ்டீவ் ஜாப்ஸ். 'பசித்திருங்கள், அறியாமையுடன் இருங்கள்' என்ற இரட்டை மந்திரங்களை அவர் சொன்னார். அப்படி இருக்கும்போதுதான் புதிய விஷயங்களைக் கற்றுக்கொள்ளும் ஆசை எழும். அப்படிக் கற்றுக்கொள்ளும்போது பெரிய பெரிய கனவுகள் வரும். பெரிதாக எதையேனும் செய்யும் ஆசை தோன்றும். 'நம் உயிரைக் கொடுத்தாவது இதைச் சாதிக்க வேண்டும் என்று நினைக்க வைக்கும் ஆசைகளைச் செயல்படுத்துங்கள்' என்கிறார் ஸ்டீவ் ஜாப்ஸ்.

## மகிழ்ச்சி தரும் ஆசைகள்!

புராதன எகிப்தில் வாழ்ந்த மக்களிடம் ஒரு நம்பிக்கை உண்டு. மரணத்தைத் தழுவியவர்கள் விண்ணுலகு செல்லும்போது சொர்க்கத்தின் வாசலில் அவர்களிடம் இரண்டு கேள்விகள் கேட்கப்படுமாம். அந்தக் கேள்விகளுக்கு அவர்கள் சொல்லும் பதில்களே, அவர்கள் சொர்க்கத்தில் நுழையத் தகுதியானவர்களா என்பதைத் தீர்மானிக்கும்.

'நீ உன் வாழ்க்கையில் மகிழ்ச்சியைக் கண்டு கொண்டாயா', 'உனது வாழ்க்கை மற்றவர்களுக்கு மகிழ்ச்சியைத் தந்திருக்கிறதா' என்பவையே அந்த இரண்டு கேள்விகள். நாம் எப்படி ஆசைப்பட வேண்டும் என்பதற்கு வழிகாட்டுகிறது இது. நமக்கும் மற்றவர்களுக்கும் மகிழ்ச்சி தருகின்ற விஷயங்களை மட்டுமே ஆசைகளாக்கிக் கொள்ளலாம்.

## சொல்லாமல் போன ஆசைகள்!

நாம் எல்லோரும் பல்வேறு ஆசைகளோடுதான் வாழ்கிறோம். சில நேரங்களில் அந்த ஆசைகளில் ஒன்று நடந்துவிடும்போது, "இதற்காகத்தான் ஆசைப்பட்டேன், எனக்குக் கிடைத்துவிட்டது'' என்று அந்த ஆசையை வெளிப்படையாகச் சொல்கிறோம். ஆனால், 'இதையெல்லாம் வெளியில் சொன்னால் கேலி செய்வார்கள்' என்று கூச்சப்பட்டுக்கொண்டு பல ஆசைகளைச் சொல்வதில்லை. நெருங்கிய நண்பர்கள், உறவுகளிடம்கூடச் சொல்ல நினைத்துச் சொல்லாமல் போன ஆசைகள் ஒவ்வொருவர் மனதிலும் உண்டு.

குழந்தையாக இருந்தபோது ஊஞ்சலாடி இருப்போம். சறுக்கு மரத்தில் சறுக்கியடித்து விளையாடி இருப்போம். வயதான பின்பும் எங்காவது பூங்காவில் இவற்றைப் பார்க்கும்போது, விளையாடும் ஆசை எழும். 'மற்றவர்கள் கிண்டல் செய்வார்கள்' என்பதால் அமைதியாக நகர்ந்துவிடுவோம். அடுத்தவர்களுக்கு துன்பம் ஏற்படுத்தாமல் நமக்கு மகிழ்ச்சி கிடைக்கும் என்றால், அந்த ஆசைகள் அடையக்கூடியவையே! அடுத்தவர்களின் நினைப்பைப் பொருட்படுத்த வேண்டாம். உங்கள் சின்னச் சின்ன ஆசைகளை நிறைவேற்றுங்கள்.





ஒரு குழந்தையைப் பொம்மைக்கடைக்குக் கூட்டிப் போனால், அங்கிருக்கும் எல்லாப் பொம்மைகளையும் அது கேட்கும். தனக்கு எவ்வளவு பொம்மைகள் போதுமானவை என்ற கணக்கு அந்தக் குழந்தைக்குத் தெரியாது. அதன் ஆசைக்கும் எல்லைகள் கிடையாது.

# ஆசைகள் வளரும்!

வளர்ந்தபிறகு இந்த எல்லையை எல்லோரும் உணர்ந்துகொள்கிறார்கள். உணவுகளை ரசித்துச் சாப்பிடும் ஒருவர், ஒரு நல்ல ஹோட்டலின் மெனு கார்டைப் பார்த்ததும் ஏகப்பட்ட உணவுகளை ஆர்டர் செய்ய ஆசைப்படுவார். ஆனால், நம்மால் இவ்வளவுதான் சாப்பிட முடியும் என்ற அளவு தெரிவதால், அதற்கு ஏற்றபடி மிகச் சிறந்ததை மட்டும் வாங்கிச் சாப்பிடுவார். நகைக்கடைக்குப் போகும் ஒரு பெண்மணி, அங்கிருக்கும் எல்லா நகைகளையும் ஆசையுடன் அணிந்து பார்ப்பார். பல நகைகளை வாங்க ஆசைப்படுவார். அவற்றின் விலை மட்டுமே அந்த ஆசையைத் தடுக்கும்.

அடுப்பின் நெருப்பில் விறகுகளை நிறையப் போடப் போட, அந்த நெருப்பு வளர்ந்துகொண்டே இருக்கும். அப்படி ஒவ்வொருவர் வாழ்விலும் புதுப்புது ஆசைகள் ஆயிரக்கணக்கில் தோன்றும். தினம் தினம் மனத்தில் தோன்றும் ஆசைகளை ஒரு நோட்டில் எழுதி வைக்க ஆரம்பித்தால், உலகிலேயே மிகப்பெரிய புத்தகமாக அது ஆகியிருக்கும்.

அப்படி எழுதி வைத்ததைச் சில மாதங்கள் கழித்து படித்துப் பார்த்தால், ஒரு விஷயம் புரியும். நம் பல ஆசைகள் அபத்தமானவையாக இருந்திருக்கும். உண்மையில் நாம் மகிழ்ச்சியாக வாழ்வதற்கு இத்தனை விஷயங்கள் தேவையில்லை. ஒரு மாமரத்தில் வருடா வருடம் புதிதாக காய்கள் காய்த்துக் குலுங்குவது போல, ஆசைகள் அடுத்தடுத்து வந்துகொண்டே இருக்கின்றன. அவை எப்போதும் முற்றுப் பெறுவதே இல்லை.

இந்த உலகிலேயே மிக வேகமாக பயணம் செய்யும் ராக்கெட்டை விடவும் மிக வேகமாகச் சிந்திக்கக்கூடியது மனித மனம். அந்தச் சிந்தனைகளின் ஒரு பகுதியாக பல ஆசைகள் இருக்கும். ஒருநாளில் ஒருவர் மனத்தில் எழும் ஆசைகள் அனைத்தும்நிறைவேறுவதாக வைத்துக்கொள்வோம். அதன் விளைவுகள் விபரீதமாக இருக்கும்.

காலையில் தாமதமாகத் தூங்கி எழுகிறார் ஒருவர். அலாரம் அடித்தது கூட

அவருக்குக் கேட்கவில்லை. கிளம்ப லேட் ஆவதால் அவருக்குள் பதற்றம் தொற்றிக்கொள்கிறது. 'இந்த அலாரம் வெறுமனே சத்தம் போடுவதற்கு பதிலாக, நம் மண்டையில் ஒரு குட்டு வைத்து எழுப்பியிருக்கலாம்' என்று ஆசைப்படுகிறார். அலாரம் அடித்தும் தூக்கத்திலிருந்து விழிக்காதவர்கள் தலையில் எல்லாம் அந்த அலாரம் ஒரு குட்டு வைத்தால் விபரீதம் அல்லவா ஏற்படும்!

லேட்டாகக் கிளம்பி போக்குவரத்து நெரிசலில் சிக்கிக்கொள்ளும் அவர், 'இந்த மோட்டார் சைக்கிளுக்கு பறக்கும் சக்தி இருந்தால் சீக்கிரம் ஆபீஸ் போய்விடலாமே' என்று ஆசைப்படுகிறார். அப்படி ஒரு சூழலை நினைத்துப் பாருங்கள்... சாலைகளில் தாறுமாறாக வாகனங்கள் ஓடுவது போல, வானத்திலும் சீறிப் பாயும். தரையிலாவது சாலை ஒரு குறிப்பிட்ட அளவுதான் இருக்கும். ஒழுங்குபடுத்த சிக்னல்கள் இருக்கும், போக்குவரத்துக் காவலர் இருப்பார். வானத்தில் அது இல்லை என்றால், இஷ்டத்துக்கு ஒவ்வொரு திசையில் எல்லோரும் சென்று, அங்கும் ஏராளமான விபத்துகள் ஏற்படும்.

திடீரென மழை பிடித்துக்கொண்டால், வீட்டுக்குள் இருந்தபடி ஜன்னல் வழியே அதை ரசிக்கும் ஒருவர், அந்த மழை இன்னும் நீண்ட நேரம் நீட்டித்து நன்கு பெய்ய வேண்டும் என்று ஆசைப்படுவார். மழையில் நனையக்கூடாது என்பதற்காகத் தன் பைக்கை நிறுத்திவிட்டு பஸ் ஸ்டாப்பில் ஒதுங்கியிருக்கும் ஒருவர், 'இந்த மழை இரவில் மட்டும் பெய்தால் என்ன' என்று ஆசைப்படுவார். இயற்கையே இதனால் குழம்பிப் போய்விடும். கோடைக் காலத்தில் தங்கள் ஊர் ஊட்டியும் கொடைக்கானலும் போல மாறிவிட வேண்டும் என்று ஆசைப்படும் மனிதர்கள் ஏராளம். அப்படி மாறினால், இயற்கையின் சமநிலை அல்லவா மாறிப் போகும்!

மிகச் சாதாரணமான வீட்டில் வசிக்கும் ஒருவர், டி.வி., விளம்பரத்தில் வரும் நவீன வசதிகள் கொண்ட பாத்ரூமைப் பார்த்துவிட்டு, 'நம் வீட்டு பாத்ரூம் இப்படி மாடர்னாக மாறினால் எப்படி இருக்கும்' என்று ஆசைப்படுகிறார். அப்படி மாறினால், அவரின் ஒட்டுமொத்த வீட்டிலும் பாத்ரூம் மட்டுமே பெரிய அறையாக இருக்கும்.

ஒரு திரைப்படத்தின் கனவுக் காட்சியில் ஸ்விட்சர்லாந்து பனிமலையில் நாயகனும் நாயகியும் நடனமாடுவதைப் பார்த்துவிட்டு, 'நாம் குடும்பத்துடன் இந்த மலையில் ஆடிப் பாடினால் நன்றாக இருக்கும்' என்று ஆசைப்படுவார்கள் பலர். அடுத்த காட்சியிலேயே துபாயில் இருக்கும் ஒரு ஷாப்பிங் மால் வந்தால், 'இங்கே நாம் போனதே இல்லையே, போனால் எப்படி இருக்கும்' என்று ஆசைப்படுவார்கள். இந்த ஆசைகள் நிறைவேறினால், விசா இல்லாமல் நாட்டுக்குள் நுழைந்த குற்றத்துக்காக அவர் குடும்பத்துடன் சிறைக்கு அல்லவா போக வேண்டியிருக்கும்.



''முப்பது வருஷத்துக்கு முன்னாடி இங்க ஒரு கிரவுண்டு பத்தாயிரம் ரூபாய்க்கு விற்றது. இன்னைக்கு ஒரு கோடி ரூபாய் கொடுத்தாலும் கிடைக்காது'' என்று நண்பர் ஒருவர் தன் ஏரியாவின் பெருமையைச் சொல்லும்போது, 'இங்கே முன்பே இடம் வாங்கி ஒரு வீடு நாம் கட்டி இருக்க வேண்டும்' என்று ஆசை எழும். கால இயந்திரத்தில் பின்னோக்கிச் சென்று இப்படி நாம் நடத்திவிட ஆசைப்படும் விஷயங்கள் ஏராளம்.

நெறிப்படுத்தப்படாத, இயல்புக்கு முரணான ஆசைகள் பலவும் அவஸ்தைகளையே கொடுக்கும். அர்த்தமற்ற ஆசைகள் திரும்பத் திரும்ப எழும்போது மன நிம்மதி கெடும். பெரும்பாலும் தங்களால் இயல்பாக அடைய இயலாத விலைமதிப்புள்ள விஷயங்களுக்கே பலரும் ஆசைப்படுகிறார்கள். அந்த ஆசை ஏக்கத்தில் முடியும். இப்படிப் பல ஏக்கங்கள் மனத்தில் சேரும்போது, 'ஆசைப்பட்ட விஷயங்களை அடைய முடியாத வாழ்க்கை ஒரு வாழ்க்கையா' என்று விரக்தி ஏற்படும். இதனால் ஒருவரின் தன்னம்பிக்கை குறையும். அதன்பின் அவரால் இயல்பான வேலைகளைக்கூடச் செய்ய முடியாது.

கடவுள்களுக்கே ஆசைப்பட்ட விஷயங்கள் நடக்காமல் போனதாகப் புராணங்களில் படித்திருக்கிறோம். எனவே, ஆசைகள் எழும்போது 'இது நம் தேவைக்கு அப்பாற்பட்ட விஷயம். இது இல்லாமலும் நம்மால் மகிழ்ச்சியாக வாழ முடியும். இதைவிட முக்கியமான தேவைகள் நமக்கு இருக்கின்றன' என்று உணர்ந்து அந்த ஆசையை ஒதுக்க வேண்டும்.

தவறான ஆசைகள் வளர்ந்துகொண்டே இருக்கும்தான். ஆனால், விளக்கைச் சுற்றும் விட்டில் பூச்சி போல அந்த ஆசைகளைச் சுற்றி நாம் சுழலக்கூடாது. ●

❖ ஆசைக்கு எல்லைகள் கிடையாது. அதுதான் உலக விதி. இந்தப் பிரபஞ்சம் உருவானதற்குக் காரணமே ஆசைதான்.

❖ வாழ்வில் சாதிக்க வேண்டும் என்ற தணியாத ஆசையே உங்களை மற்றவர்களிடமிருந்து வித்தியாசப்படுத்திக் காட்டும்.

❖ உங்களின் நியாயமான ஆசைகள் எல்லாம் செயல் வடிவம் பெற்றால், உங்கள் கனவுகள் அனைத்தும் நிஜமாவதைக் காண முடியும்.

❖ எல்லாச் சாதனைகளின் ஆரம்பப்புள்ளியும், ஏதோ ஒரு மனிதனின் ஆசைதான். வெறும் நம்பிக்கைகளோ, விருப்பங்களோ எதையும் மாற்றிவிடுவதில்லை.

❖ எப்போதும் ஏதேனும் ஒரு பயனுள்ள விஷயத்தைக் கற்றுக்கொள்ள ஆசைப்படுங்கள்.

❖ உங்கள் ஆசை வலிமையானதாக இருக்கும்போது, அதைச் சாதிக்கும் ஊக்கம் கிடைக்கும். ஊக்கம் பெரிதாகக் கிடைக்கும்போது, சாதனையும் பெரிதாக இருக்கும்.

❖ ஆசைகள் மோசமானவை இல்லை. ஆனால், தவறான ஆசைகளுக்கு அடிமையாவதே மோசமான விஷயம்.

❖ தகுதிக்கு மீறி ஆசைப்படக்கூடாது என்பது உண்மைதான். ஆனால், உங்கள் தகுதி என்ன என்று அடுத்தவர்கள் முடிவு செய்யக்கூடாது.

❖ வெற்றிகரமான மனிதர்கள், 'சாதிக்க வேண்டும்' என்ற ஆசையால்தான் உச்சம் தொடுகிறார்கள். 'அடுத்தவர்களைத் தோற்கடிக்க வேண்டும்' என்ற ஆசையால் அல்ல.

❖ ஆசையே எந்த முயற்சிக்கும் அடிப்படைக் காரணம். ஆனால், ஆசை மட்டுமே போதாது. உறுதியான செயல்பாடும், தளராத உழைப்பும் இருந்தால் மட்டுமே சாதிக்க முடியும்.

❖ நிலத்தில் விளையும் களைகள், பயிர்களைப் பாதிக்கின்றன. மனதில் விளையும் தவறான ஆசைகள், மனிதனின் குணங்களைப் பாதிக்கின்றன.

❖ தவறான ஆசைக்கு அடிமையானோர், ஆசை வெள்ளத்தில் சிக்குகின்றனர். சிலந்தி, தான் பின்னிய வலையிலேயே கட்டுப்பட்டிருப்பதைப் போல அவர்கள் மாட்டிக்கொள்கின்றனர்.

❖ ஆசைகள், உணர்வுகள், அறிவு... இந்த மூன்றுமே மனிதர்களின் நடத்தையைத் தீர்மானிக்கின்றன.

❖ காலம் நம்முடன் விளையாடுகிறது. அதனால் ஆயுள் தேய்கிறது. ஆனால் ஆசையின் பிடிப்பு மட்டும் தளர மறுக்கிறது.

❖ உங்களிடம் திறமையும், நியாயமான ஆசையும் இருந்தால், நீங்கள் விரும்பும் எதையும் உங்களால் சாதிக்க முடியும்.

❖ ஆசைகள் குறையும்போது மகிழ்ச்சியின் அளவு அதிகரிக்கும்.

❖ 'முன்னேற வேண்டும்' என்ற ஆசை ஒரு பக்கம், 'வாழ்க்கையை அனுபவிக்க வேண்டும்' என்ற ஆசை இன்னொரு பக்கம். இந்த இரண்டுக்கும் இடையே ஒவ்வொரு நாளும் அல்லாடுவதே வாழ்க்கை.

❖ உங்கள் ஆசை எவ்வளவு வலிமையானது, உங்கள் கனவு எவ்வளவு பெரியது, ஏமாற்றங்களை எப்படித் தாங்கிக் கொள்கிறீர்கள் என்பதைப் பொறுத்தே உங்கள் வெற்றியின் அளவு இருக்கும்.

❖ ஆசை இல்லாமல் எந்த ஒரு மனிதனும் எந்தச் செயலையும் செய்வதில்லை. ஒரு ஆசையின் தூண்டுதலினால், ஆசை நிறைவேறவே அவன் எதையும் செய்கிறான்.

❖ ஒரு மரத்தை வெட்டினாலும் அதன் வேர்கள் சேதமாகாவிட்டால் அது மீண்டும் துளிர்த்து வளரும். அதுபோல, தவறான ஆசைகளின் வேர்கள் அறுபடாதவரை, துன்பமே வளரும்.



# ஆசை மொழிகள்!

❖ ஆசை வெட்கம் அறியாது. மீசை நரைத்தாலும் ஆசை நரைப்பதில்லை.

❖ ஆசையே துன்பத்துக்குக் காரணம். ஆசை வந்துவிட்டால். பொறுமை பறந்தோடிப் போகும்.

❖ உங்களின் மகத்தான ஆசையை எப்படியாவது நிஜமாக்கிக் காட்டுவதே, நீங்கள் செய்ய வேண்டிய சிறந்த விஷயம்.

❖ அறிவுத்திறனே உங்கள் ஆசைக்குக் கண்களாகவும், உங்கள் ஆன்மாவுக்கு வழிகாட்டியாகவும் மாறும்.



❖ வென்றவர்களுக்கும் தோற்றவர்களுக்கும் திறமையில் பெரிய வித்தியாசம் இருப்பதில்லை. விரும்பும் ஒரு விஷயத்தை எப்படியாவது அடைந்துவிட வேண்டும் என்ற ஆசை இருப்பவர்கள் ஜெயிக்கிறார்கள். இல்லாதவர்கள் தோற்கிறார்கள்.

❖ ‘இதை அடையும் தகுதியும் திறமையும் நமக்கு இருக்கிறதா’ என்று எடை போட்டுப் பார்த்துவிட்டு ஆசைப்படுங்கள்.

❖ இந்த உலகத்தை தொடர்ந்து மாற்றிக்கொண்டே இருப்பவை இரண்டு உணர்வுகள்தான். ஒன்று, அச்சம். இன்னொன்று, ஆசை.

❖ எதற்கும் ஆசைப்படாதவர்களே எல்லாவற்றையும் அடைந்து மகிழ்ச்சியுடன் வாழ்கிறார்கள்.

❖ வாழ்வில் முன்னேறிச் சென்றுகொண்டே இருப்பதற்கு சில ஆசைகள் அவசியப்படுகின்றன.

❖ உங்களிடம் இல்லாத விஷயங்களுக்காக ஆசைப்படுங்கள். ஆனால், இருக்கும் விஷயங்களைக் கெடுத்துவிடாதீர்கள். ஏனெனில், இப்போது உங்களிடம் இருப்பனவற்றில் பல விஷயங்கள் முன்பு நீங்கள் அடைய ஆசைப்பட்டவைதான்.

❖ இந்த உலகம் சிறியது. மனிதர்கள் சிறியவர்கள், மனித வாழ்வு குறுகியது. இந்த எல்லாவற்றையும்விடப் பெரியது, ஆசை.

❖ பெரிய பெரிய ஆசையும், அதைச் சாதிக்க வேண்டும் என்ற உறுதியும் இல்லாத மனம் ஒரு தூங்கும் எரிமலை போன்றது. அது எந்த விளைவையும் ஏற்படுத்தாது.

❖ நம்மால் அடைய முடிவதைவிடப் பெரிய இலக்குகளைச் சாதிக்க வேண்டும் என்று எப்போதும் ஆசைப்படுங்கள்.

❖ தோல்வி உங்களை முடக்கிப் போட அனுமதிக்காதீர்கள். வெற்றி அடைய வேண்டும் என்ற உங்கள் ஆசையை இன்னும் பெரிதாக்கிக்கொள்ளுங்கள்.

❖ குழந்தைகளுக்கு நல்ல கல்வியைக் கொடுங்கள். நியாயமாக ஆசைப்படுவது எப்படி என்பதை அதன்பின் அவர்கள் கற்றுக்கொள்வார்கள். ●

ஒருவர் கடினமாக உழைக்காமல் தனக்கு உயர்வும் வசதிகளும் கிடைக்க வேண்டும் என்று ஆசைப்படுவார். இன்னொருவர் தனக்குக் கொடுக்கப்பட்ட வேலையை மற்ற எல்லோரையும்விடச் சிறப்பாகச் செய்வார். அந்த வேலையை நேசித்து ஆசையாகச் செய்வார். அதன் விளைவுகள் குறித்துக் கவலைப்படமாட்டார். உயர்வுகளுக்கு ஆசைப்படாவிட்டாலும், இந்த இரண்டாவது மனிதருக்கே அவை எல்லாம் கிடைக்கும்.

நம் ஒவ்வொரு செயலின் பின்னாலும் ஆசையே இருக்கிறது. அதுவே உந்துசக்தியாக இருந்து நம்மை செயல்புரிய வைக்கிறது. நாம் நடக்க ஆசைப்படும்போது நடக்கிறோம். ஓய்வெடுக்க ஆசைப்பட்டால், உட்கார்ந்து ஓய்வெடுக்கிறோம். சாப்பிட ஆசைப்படும்போது சாப்பிடுகிறோம். சாப்பிடாமல் விரதம் இருக்க ஆசைப்பட்டால், பட்டினி கிடக்கிறோம். வசதிகளுக்கு ஆசைப்படுவதால் வேலை செய்கிறோம். உயர்வுக்கு ஆசைப்பட்டால், அந்த வேலையை நன்றாகச் செய்கிறோம்.

# ஆசையே நம் உந்துசக்தி!



ஆசைகள் இல்லாவிட்டால் வாழ்க்கை இல்லை. சின்ன விஷயமோ, பெரிய செயலோ, எல்லாவற்றையும் நாம் செய்வதற்கு ஆசைதான் முதல் காரணம். எதற்காக ஆசைப்படுவது, எந்த அளவுக்கு ஆசைப்படுவது என்பதுதான் இங்கு முக்கியமான கேள்வி. ஏனெனில், ஒவ்வோர் ஆசையும் நம்மை வெவ்வேறு பாதைகளுக்கு இட்டுச் செல்லும். நாம் செல்ல வேண்டிய பாதை எது என்பதைக் கவனமாகவும் புத்திசாலித்தனமாகவும் தேர்வு செய்ய வேண்டும்.

ஆசை எப்படித் துன்பங்களுக்குக் காரணமோ, அதைப் போலவே இன்பங்களுக்கும் ஆசையே காரணம். நாம் மிகவும் விரும்பி அடைய ஆசைப்படும் ஒன்றைத் தேடிப் போனால் நமக்குத் துன்பமே மிஞ்சும் என்றால், அந்த ஆசையைக் கைவிட வேண்டும்.

நம் ஆசைகள் நமக்கு நன்மையும் தீமையும் செய்வது போலவே, அடுத்தவர்களின் ஆசைகளும் நம் வாழ்வில் தாக்கத்தை ஏற்படுத்தும். நம்மை வெறுப்பவர்கள் சிலர் நமக்குத் துன்பம் நேர வேண்டும் என்று ஆசைப்படுவார்கள். அதற்காக முயற்சியும் செய்வார்கள். அந்த முயற்சி அவர்களுக்கும் துன்பத்தையே கொடுக்கும் என்பதை அவர்கள் உணர்வதில்லை.

நம்மை நேசிப்பவர்களின் ஆசைகள் அனைத்தும் நமக்கு நன்மைகளே செய்யும். எழுதப்படாத காகிதம் போல ஒரு குழந்தையாகப் பிறந்த நம்மை, நம் அம்மாவின் ஆசையே நல்ல மனிதராக வளர்த்தது. ஒவ்வொரு கட்டத்திலும் அன்பும் அறமும் ஊட்டி வளர்க்கச் செய்தது. அப்பாவின் ஆசையே நம்மைப் படிக்கவைத்து, நல்ல வருமானத்தை ஈட்டும் நிலைக்கு உயர்த்தியது. உடன்பிறந்தவர்கள், ஆசிரியர்கள், வாழ்க்கைத்துணை, நண்பர்கள், உறவுகள் என்று எல்லோரது ஆசைகளும் முயற்சிகளும் இணைந்தே நமக்கு நல்வாழ்வை உருவாக்கித் தந்தன.

நம் ஆசைகளும் தனியானவையாக இருக்கக்கூடாது. அவை நமக்கானவையாக மட்டுமே இருக்கக்கூடாது. குடும்பம், பெற்றோர், உறவுகள், நண்பர்கள், அக்கம்பக்கத்தினர், வாழ்வில் நமக்கு உதவிகள் செய்து கைதூக்கிவிட்டவர்கள் என்று எல்லோரின் நல்வாழ்வையும் விரும்புவதாகவே நம் ஆசைகள் இருக்க வேண்டும். அப்படிப்பட்ட ஆசைகளே நமக்கு நிம்மதி கொடுக்கும். ●

# பாராட்டுக்கு ஆசைப்படுங்கள்!

யாசகம் செய்து பிழைப்பு நடத்தும் ஒருவன், ஊர் எல்லையில் இருக்கும் மரத்தடியில் படுத்து தூங்கிக்கொண்டிருந்தான். அந்த வழியாக வந்த வியாபாரி ஒருவர், அங்கே அமர்ந்து சாப்பிட்டுவிட்டுக் களைப்பு தீர ஓய்வெடுத்தார். கொஞ்ச நேரம் கழித்து விழித்த பிச்சைக்காரன், “நீங்கள் யார்? என்ன செய்கிறீர்கள்?” என்று விசாரித்தான்.

“நான் நிறைய பொருட்களைக் கடற்கரை நகரில் வாங்கிவந்து ஊர் ஊராகச் சென்று விற்கிறேன். அதில் எனக்கு ஒரு பங்கு லாபம் கிடைக்கிறது. நீங்கள் என்ன செய்கிறீர்கள்?” என்றார் வியாபாரி.

“நான் ஊர் ஊராக என் திருவோடு ஏந்திச் சென்று மக்களிடம் யாசகம் செய்வேன். அவர்கள் தங்கள் உணவில் ஒரு பங்கை எனக்குத் தருகிறார்கள். அதை எடுத்துவந்து இப்படி எங்காவது சாப்பிட்டுவிட்டு தூங்கி ஓய்வெடுப்பேன்” என்றான் பிச்சைக்காரன்.

“ஏன் இப்படி வாழ்கிறாய்? ஏதாவது வேலை செய்து பிழைக்கலாமே? நிறைய பணம் சம்பாதிக்கலாம். சொந்த வீடு வாங்கலாம். நல்ல உடைகள் வாங்கி உடுத்தலாம். நல்ல உணவு சாப்பிடலாம்.”

“இதையெல்லாம் செய்வதன் மூலம் நான் என்ன சாதிக்கப் போகிறேன்?”

“நிம்மதியாகவும் மகிழ்ச்சியாகவும் வாழலாம் அல்லவா?”

“இப்போதே நான் அப்படித்தானே இருக்கிறேன்” என்றான் பிச்சைக்காரன்.

வியாபாரி அவனை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, “உன்னைப் போல மற்றவர்கள் உழைப்பில் உணவு, உடை என்று எல்லாவற்றையும் பெற்றுக்கொண்டு சும்மா சுகமாக வாழும் எல்லோரும் யோசிக்க வேண்டும். உங்களுக்கு வேண்டிய அனைத்தையும் இந்தச் சமூகம் தருகிறது. பதிலுக்கு இந்தச் சமூகத்துக்கு நீங்கள் என்ன செய்கிறீர்கள்? நீ ஓய்வெடுக்கும் இந்த நிழலைத் தரும் மரம் கூட யாரோ நட்டதுதான். நீ என்ன செய்திருக்கிறாய்?” என்று கேட்டார்.

எந்த வயதில் இருக்கும் மனிதராக இருந்தாலும், அவர் அங்கீகாரத்துக்கும் பாராட்டுக்கும் ஆசைப்படுவார். ஒரு குழந்தை, பாராட்டுக்கு ஆசைப்பட்டே சாதனைகள் செய்கிறது. ஒரு நிறுவனத்துக்காகத் திறமையாக உழைக்கும் ஒருவர், அதற்கான பாராட்டு தனக்குக் கிடைக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறார். எந்தத் தொழில் செய்பவரும், தன் சேவைக்கு அங்கீகாரம் வர வேண்டும் என ஆசைப்படுகிறார். ஒரு பாடகர், ஓர் இசைக்கலைஞர், ஓவியர், எழுத்தாளர், பேச்சாளர் என்று யாரும் இதில் விதிவிலக்கு இல்லை. அன்பாகச் சமைத்துக் கொடுக்கும் அம்மாவின் மனமும் பாராட்டுக்காக ஏங்கும். ஒரு நிமிடப் பாராட்டு கூட அவர் மனத்தில் மகிழ்ச்சியைப் பூக்கச் செய்யும்.

ஒவ்வொருவரும் தங்கள் திறமையை, தகுதியை, தாங்கள் செய்யும் நற்செயலை, அதன் விளைவுகளை அறிந்தாலும், அதையெல்லாம் இன்னொருவரின் வார்த்தைகளில் கேட்க வேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். அவர்களுக்குக் கிடைக்கும் பணத்தைத் தாண்டி இதுவே பெரிதாகத் தெரியும். ‘இந்தச் சமூகம் என்னைக் கவனிக்கிறது. என் திறமையை அங்கீகரித்துப் பாராட்டுகிறது’ என்ற உணர்வே அவர்களை இன்னும் சாதிக்கத் தூண்டுகிறது. சமூகத்துக்குத் தங்கள் கடமைகளைச் செய்ய வைக்கிறது.

சமூகத்திலிருந்து ஒதுங்கிவிடாமல், தனித் தீவாக மாறிவிடாமல், எல்லோருடனும் இணைந்திருக்க வேண்டும். நம்மை நினைவுபடுத்துவது போல பயனுள்ள பணிகளை இந்தச் சமூகத்துக்காகச் செய்ய ஆசைப்பட வேண்டும்.






# கொங்கு நிறுவனத் தொடக்க விழாவில் ராம்ராஜ்!

**கொ**ங்கு பன்னாட்டு வர்த்தகம் மற்றும் கலாச்சார நிறுவனத் தொடக்க விழா மற்றும் தொழில் முனைவோர் கருத்தரங்கம் பல்லடம் நகரில் நடைபெற்றது. கொங்கு சமுதாயத் தொழில் முனைவோர்கள் முன்னிலையில் நடைபெற்ற இந்த விழாவை பேரூர் ஆதீனம் முனைவர் சீர்வளர்சீர் சாந்தலிங்க மருதாசல அடிகளார், சிரவை ஆதீனம் முனைவர் தவத்திரு குமரகுருபர சுவாமிகள் ஆகியோர் தலைமையேற்று அருளாசி வழங்கினர். இந்தத் தொடக்க விழாவில் ராம்ராஜ் காட்டன் நிறுவனர் திரு. K.R.நாகராஜன் அவர்கள் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று வாழ்த்துரை வழங்கினார். நிறுவனத்தை வளர்த்து, பன்னாட்டு வர்த்தகம் மற்றும் கலாச்சார விரிவாக்கம் செய்வதற்கான யோசனைகளையும் அவர் வழங்கினார்.




# சான்றிதழ் வழங்கும் விழாவில் ராம்ராஜ்!

**உ**லக சமுதாய சேவா சங்கத்தின் யோகா பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கு சான்றிதழ் வழங்கும் விழா, ஆழியாறு அறிவுத் திருக்கோயிலில் நடைபெற்றது. அறிவுத் திருக்கோயில் மற்றும் உலக சமுதாய சேவா சங்க நிர்வாகிகள் முன்னிலையில் நடைபெற்ற இந்த விழாவில் எஸ்.ஆர்.எம் பல்கலைக்கழக வேந்தரும் மக்களவை உறுப்பினருமான டாக்டர் T.R. பாரிவேந்தர், எஸ்.ஆர்.எம் பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் C. முத்தமிழ்ச்செல்வன், ஆகியோர் கலந்துகொண்டு சான்றிதழ்களை வழங்கினர்.

உலக சமுதாய சேவா சங்கத்தின் துணைத் தலைவரும், ராம்ராஜ் காட்டன் நிறுவனருமான திரு. K.R.நாகராஜன் அவர்கள் வரவேற்றார்.




# சர்வதேச யோகா தின விழா!

திருப்பூர் மண்டல உலக சமுதாய சேவா சங்கத்தின் சார்பில் சர்வதேச யோகா தின விழா, ஜூன் 21 அன்று திருப்பூர் ஜெய்வாபாய் மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி கலையரங்கில் கொண்டாடப்பட்டது. உலக சமுதாய சேவா சங்கத்தின் துணைத் தலைவரும், ராம்ராஜ் காட்டன் நிறுவனருமான திரு. K.R.நாகராஜன் அவர்கள் தலைமையுரை நிகழ்த்தி இந்த விழாவைத் தொடங்கி வைத்தார்.

முன்னதாக, சங்கத்தின் திருப்பூர் மண்டலச் செயலாளர் திரு. A.V.பழனிசாமி அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். உலக சமுதாய சேவா சங்கத்தின் துணைத் தலைவர் திரு. P.K.ஆறுமுகம் அவர்கள் யோகா பயிற்சியைத் தொடங்கி வைத்தார். பள்ளித் தலைமை ஆசிரியை திருமதி. அ.ஸ்டெல்லா அமலோற்பவ மேரி முன்னிலை வகித்தார். திருப்பூர் மாநகராட்சியின் துணை மேயர் மதிப்பிற்குரிய MKM. பாலசுப்பிரமணியன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். திருப்பூர் மாநகராட்சியின் மேயர் மாண்புமிகு N.தினேஷ்குமார் அவர்கள் சிறப்புரையாற்றினார். சங்கத்தின் திருப்பூர் மண்டலத் தலைவர் திரு. N.கருணாநிதி அவர்கள் நன்றியுரை வழங்கினார்.

நிகழ்வில் ஆயிரக்கணக்கான மாணவிகள் இணைந்து யோகா பயிற்சி செய்தனர்.






# மாணவர் திறனூக்க முகாமில் ராம்ராஜ்!

ஆழியாறு அறிவுத் திருக்கோயிலில் பதின்பருவ மாணவ, மாணவிகளுக்கான திறனூக்க முகாம் நடைபெற்றது. மாணவ, மாணவிகளுக்கு வாழ்வியல் பயிற்சிகள், யோகா போன்றவை வழங்கப்பட்டன. கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. இந்த முகாமின் சிறப்பு நிகழ்ச்சிக்கு வந்திருந்த விருந்தினர்களை உலக சமுதாய சேவா சங்கத்தின் துணைத் தலைவரும், ராம்ராஜ் காட்டன் நிறுவனருமான திரு. K.R.நாகராஜன் அவர்கள் வரவேற்றார்.

தமிழக அரசின் மருத்துவம் மற்றும் ஊரகப்பணிகள் இயக்குநர் டாக்டர் ஜெய ராஜமூர்த்தி அவர்கள் சிறப்புரை வழங்கினார். திரைப்பட இயக்குநர் திரு. SP.முத்துராமன், அறிவுத் திருக்கோவில் இணை நிர்வாக அறங்காவலர் அருள்நிதி M.சின்னசாமி, உலக சமுதாய சேவா சங்கத்தின் நிதி இயக்குநர் அருள்நிதி இரா.பச்சையப்பன், பட்டிமண்டப அறிஞர் பேராசிரியர் M. இராமச்சந்திரன், சிரிப்பு யோகா பயிற்றுநர் திரு. சிரிப்பானந்தா சம்பத் ஆகியோர் கலந்துகொண்டனர்.

விழாவில் பங்கேற்றவர்களுக்கு ராம்ராஜ் காட்டன் நிறுவனர் திரு. K.R.நாகராஜன் நினைவுப்பரிசு வழங்கினார்.

RAMRAJ காட்டன்
வேட்டிகள் • சர்ட்டுகள் • பனியன்கள்

## உங்கள் வீட்டுக்கே வர வேண்டுமா?

# வெண்மை

## சந்தாதாரர் ஆகுங்கள்!



'உயர்ந்த எண்ணங்கள் உலகம் முழுவதும் சென்றடைய வேண்டும்' என்ற உயரிய நோக்கில் மதிப்புமிக்க படைப்புகளைத் தொடர்ந்து வெளியிட்டு வருகிறது வெண்மை. இந்த மாத இதழ் ஒவ்வொரு குடும்பத்திலும் பாதுகாக்கப்படும் பொக்கிஷமாகத் திகழ்கிறது.

**ஓர் ஆண்டு சந்தா ரூ.200**
**இரண்டு ஆண்டுகள் சந்தா ரூ.380**

காசோலை/வரைவோலை மூலம் அனுப்பலாம். **VENMAII** என்ற பெயரில் செக்/டி.டி. அனுப்பவும். பின்புறம் உங்கள் பெயர், ஊர் எழுதவும்.

அல்லது

VENMAII என்ற வங்கிக் கணக்கில் (A/C No:1809135000000299 Karur Vysya Bank, Tirupur SR Nagar Branch - IFSC: KVBL0001809) பணம் செலுத்தி, அதன் ஒப்புகை பிரதியை படிவத்துடன் அனுப்பி வைக்கலாம்.

- மணியார்டர்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
- அனைத்து ராம்ராஜ் ஷோரூம்களிலும் சந்தா செலுத்தலாம்.

**வெண்மை**
ராம்ராஜ் வி டவர்,
10, செங்குந்தபுரம், மங்கலம் ரோடு,
திருப்பூர் - 641 604.
email: venmaii@ramrajcotton.net

சந்தா செலுத்தவும், மொத்தமாக வெண்மை இதழ்களைப் பெறவும் தொடர்புகொள்ளுங்கள்.
**போன்:**
**0421–4304106, 98422 74137**

## ஒரே நிமிடத்தில் வெண்மை சந்தாதாரர் ஆகலாம்!

உங்கள் சந்தாவை PhonePe G Pay Net transfer மூலம் செலுத்துங்கள்.

UPI பரிவர்த்தனை மூலமும் மொபைல் போன் மூலம் வெண்மை வங்கிக் கணக்கில் சந்தா தொகையை செலுத்தலாம். வெண்மை UPI id: kvbupiqr.75626@kvb

Bharat QR code வசதியுள்ள மொபைல் பேங்கிங் ஆப் வைத்துள்ளவர்கள், அதில் இங்கே உள்ள வெண்மை வங்கிக் கணக்கின் QR code – ஐ ஸ்கேன் செய்து சந்தா செலுத்தலாம்.

பணம் செலுத்தப்பட்டதற்கான வங்கித் தகவலை Forward செய்யுங்கள். கூடவே உங்கள் முழு முகவரியையும் அலைபேசி எண்ணுடன் வாட்ஸ்அப் செய்யுங்கள். அலைபேசி எண்: 98422 74137.

**வங்கிக் கணக்கு விவரம்: Venmaii**
**A/C No: 1809135000000299**
**Karur Vysya Bank, Tirupur SR Nagar Branch**
**IFSC Code: KVBL0001809.**



## மாணவ/ மாணவியர் சிறப்பு சலுகை

(6ம் வகுப்புக்கு மேல் படிக்கும் மாணவர்களுக்கு இந்த சலுகை பொருந்தும். சந்தா செலுத்தும்போது, மாணவர் அடையாள அட்டை நகலை இணைத்து அனுப்பவும்.)

ஒரு வருட சந்தா: ~~ரூ.200~~ ரூ.125 மட்டும். | 2 வருட சந்தா: ~~ரூ.380~~ ரூ.250 மட்டும்.



## சீனியர் சிட்டிசன் சிறப்புச் சலுகை

(60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு இந்த சலுகை பொருந்தும். பிறந்த தேதிக்கான ஆதாரச் சான்று நகலை இணைத்து அனுப்ப வேண்டும்.)

ஒரு வருட சந்தா: ~~ரூ.200~~ ரூ.125 மட்டும். | 2 வருட சந்தா: ~~ரூ.380~~ ரூ.250 மட்டும்.

ராம்ராஜ் ஷோரூம்களில் ரூ.10,000க்கு மேல் பொருட்கள் வாங்குபவர்களுக்கு
**ஒரு வருட சந்தா பரிசாக வழங்கப்படும்**



Owned, Published by K.R. NAGARAJAN, Published from 10, Sengunthapuram Mangalam Road, TIRUPUR - 641 604 & Printed by B. ASHOK KUMAR at RATHNA OFFSET PRINTERS, 40, Peters Road, Royapettah, Chennai - 600 014. Editor : T.J. GNANAVEL




Inners for Winners

RAMRAJ ©

BANIANS • BRIEFS • TRUNKS

SUKRA® Super Fine Banians
ROMEX® Supreme Banians
RISE-UP® Premium Banians
ARCHERY® Gym Vest
COMPACT® Flexible Rib Vest
ACOSTE® BANIANS | BRIEF | TRUNKS

Venmai Monthly - Postal Registration No.TN/TRU/28/2022-24. Registered with the Registrar of Newspapers for India under No.TNTAM/2016/68519. Day of Publishing 01-07-2022. Posted at Tirupur BPC on 5th of every month.

